Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO



RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லாண்ட்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C797)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 10 செவ்வாய்க்கிழமை (26.07.2011) பக்கங்கள் 16 ஓசை – 300



வடக்குத் தீர்ப்பை ஏற்கிறது அரசு 08



போரில் வெற்றி சமாதானம் இல்லை 09




சிறுவர் நலனுக்கு நடை 12



யானைகளுடன் பேசியவர் 14

# துறைமுகப் புனரமைப்பு இன்று ஆரம்பமாகிறது



காங்கேசன்துறை துறைமுகத்தினை நவீன வசதிகள் கொண்ட துறைமுகமாக அபிவிருத்திசெய்யும் வகையிலான புனரமைப்புப் பணிகள் இன்று ஆரம்பமாகின்றது.

இந்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட இருக்கும் இப்புனரமைப்பு நடவடிக்கைகள் இன்று காலை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

காலை 9.30 மணிக்கு காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நடைபெறவிருக்கும் வைபவத்தின்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந் அவர்களால் இப்புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப்புனரமைப்புப் பணி தொடர்பாக இலங்கை, இந்திய (15ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு விசேட தலைமைத்துவப் பயிற்சி

தேர்தல்களின் மூலம் தெரிவான 65 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு முறையான தலைமைத்துவப் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி மன்ற சட்டங்கள், நடைமுறைகள், கேள்விப்பத்திர நடைமுறைகள், அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளல் போன்றவை இப்பயிற்சிகளில் உள்ளடங்கும் என உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிதாக தெரிவான உள்ளூராட்சி உறுப்பினர்களின் பெயர்கள் தேர்தல்கள் ஆணையாளரால் விசேட வர்த்தமானியொன்றின் மூலம் வெளியிடப்படவுள்ளது. அதன் பின் ஒரு மாதத்தில் புதிய உள்ளூராட்சி சபைகள் செயற்படத் தொடங்கும்.

65 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 875 (15ஆம் பக்கம் பார்க்க)

## தீயணைப்பு சேவைகள் தற்காலிக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்பு வாகனத்தில் அவசர திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மறு அறிவித்தல் வரை அனைத்து தீயணைப்பு சேவைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டள்ளது என்று யாழ். மாநகர சபையின் ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

## கடவுச் சீட்டு அலுவலகம் விரைவில் வவுனியாவுக்கு

(கொழும்பு)

கடவுச்சீட்டு அலுவலகம் வவுனியா மாவட்ட செயலகத்தில் விரைவில் திறக்கப்படவுள்ளது அனைத்து பிரிவு கடவுச்சீட்டுக்களையும் கொழும்பிற்கு செல்லாது வவுனியாவிலேயே பெற்றுக்கொள்ளலாம் என வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சாள்ஸ் தெரிவித்தார். உதவி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவரின் தலைமையில் அலுவலர்கள் கடமைகளை மேற்கொள்வார்கள். வடமாகாண ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தமக்குரிய கடவுச்சீட்டுக்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது

பொதுமக்களுடைய நலன் கருதி அரசாங்கம் இந்த கிளை அலுவலகத்தை திறக்கமுன்வந்துள்ளதினை பலரும் வரவேற்றுள்ளனர். (39)

## நெல்லியடியில் குழு மோதல் இளைஞர்கள் பலர் கைது



(கரணவாய்)

நெல்லியடிப் பிரதேசத்தில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் நேற்று ஏற்பட்ட தகராறினால் ஒரு பகுதியைச் சேர்ந்த 12 இளைஞர்களை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நெல்லியடிப் பகுதியில் அல்வாய் அக்காய் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுக்களுக்கும் - துன்னாலை வேம்படி பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுகளுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது.

இத்தகராறு சண்டையாக மாறி (15ஆம் பக்கம் பார்க்க)

## மனவளர்ச்சி குன்றிய சிறுவர் அபிவிருத்தி பிராந்திய மகாநாட்டில் சிராந்தி ராஜபக்ஷ

தெற்காசிய பிராந்தியத்தில் மன வளர்ச்சி குன்றிய சிறுவர்கள் தொடர்பான விசேட மகாநாடொன்று முதல் தடவையாக பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்று ஆரம்பமாகியது.

இந்த மாநாட்டின் பிரதம அதிதியாக இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியும் விசேட அதிதிகளாக ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஷிராந்தி ராஜபக்ஷ, பங்களாதேஷ் பிரதமர ஷேக் ஹஸீனா, மாலைதீவு உப ஜனாதிபதியின் பாரியார் இல்ஹாம ஹஸைன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். தொடர்ந்து இரு நாட்கள் நடைபெறவுள்ள இம் மகாநாட்டில் சுமார் 18 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர்.



## ஊர்காவற்துறை வாக்குச்சாவடியில் முறைதவறிய உத்தியோகத்தர் மீது நடவடிக்கை

தேர்தல் கடமையில் முறை தவறி நடந்துகொண்ட அரச உத்தியோகத்தர் மீது நடவடிக்கை மேற்கொள்ள யாழ்.செயலகம் ஏற்பாடு செய்து வருகிறது.

உள்ளூராட்சித் தேர்தலின்போது ஊர்காவற்துறையில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடி ஒன்றில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் வாக்குப் பெட்டியில் ஒட்டப்பட்டிருந்த பாதுகாப்பு ஸ்ரிக்கரை அகற்றியுள்ளார். இத் தவறைச் செய்த அலுவலர் உடனடியாகவே அங்கிருந்து அகற்றப்பட்டார்.

அத்துடன் அவரை எதிர்காலத்தில் எந்த ஒரு தேர்தலிலும் கடமைக்கு அமர்த்துவதை இடைநிறுத்திக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்அரச அதிபர் தெரிவித்தார். (பா)

## விபத்தில் சிக்கியது ஆட்டோ நவாலியில் ஒருவர் படுகாயம்

(நவாலி)

நவாலி சென்பீற்றஸ் தேவாலயத்திற்கு முன்பாக ஆட்டோவில் சென்றுகொண்டிருந்த வேளை, குறுக்கே சைக்கிள் சென்றதன் காரணமாக ஆட்டோ சரிந்து விபத்து ஒன்று இடம்பெறறுள்ளது.

இச் சம்பவம் நேற்று மதியம் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் மூத்தயினார் கோவிலடியைச் சேர்ந்த வே.விஜயகாந் (வயது 19) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதில் ஆட்டோவில் பயணித்த பயணி ஒருவரே கால் நசுங்குண்டு பலத்த காயங்களுக்குள்ளாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## முல்லை. பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் மீளக்குடியேற்றம் செயயப்பட்ட இடங்களில் இரு பாடசாலைகள் நாளை முதல் மீள ஆரம்பிககப்படவுள்ளது. கடந்தவாரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கோம்பாவில், கைவேலி ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டனர். இதனை அடுத்து நாளைய தினம் கோம்பாவில விக்னேஸ்வரா வித்தியாலயம், கைவேலி கணேஷா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் ஆரம்பிக் கப்படவுள்ளது. (110)

# மருத்துவமனைக்கு வாகனம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் மேலதிகமாக பாவனையில் இருந்து வந்த "பஜிரோ" வாகனமொன்றை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் யாழ் போதனா வைத்தியசாலைக்கு நேற்று வழங்கியுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் யாழ்.செயலகத்தில் வைத்து யாழ்.அரச அதிபரினால் யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசாவிடம் இப் பஜிரோ வாகனம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், யாழ்.வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் ரவிராஜ் மற்றும் செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# பாதயாத்திரைக் குழுவினருக்கு யாழில் அமோக வரவேற்பு







(யாழ்ப்பாணம்)

நாவற்குழி வரவேற்பு வளைவிலிருந்து யாழ்.ஹற்றன் நஷனல் வங்கி ஊழியர்களும், யாழ்.சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன், டாக்டர் குகநாதன் மற்றும் டாக்டர் ஜெயக்குமார் ஆகியோர் நடை பயணக் குழுவினரை வரவேற்றதுடன், நடைப் பயணத்திலும் இணைந்து கொண்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறுவர் புற்றுநோய் வைத்திய சேவையை நிர்மாணிக்கும் நடவடிக்கைக்காக நிதி சேகரிக்கும் பொருட்டு தென்னிலங்கை தெய்வேந்திர முனையில் ஆரம்பிக்கப்பட்ட நடைப் பயணம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு வந்தடைந்தது.

தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இருந்து வல்லைவெளி வரை தமது நடைப் பயணத்தை மேற்கொண்ட இவர்கள் இன்று வல்லை வெளியிலிருந்து "பாதை" நடைப் பயணத்தை பருத்தித்துறை முனை வரை தொடர்ந்து நாளை பருத்தித்துறை வெளிச்ச வீட்டை அடைவார்கள்.

இந்நிகழ்வில், முத்தையா முரளிதரன், குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்த்தன, அஞ்சலோ மத்தியூஸ் ஆகிய கிரிக்கெட் வீராகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பருத்தித்துறை வெளிச்ச வீட்டை அடைந்து தமது நடைப் பயணத்தை நிறைவு செய்த பின்னர், யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைப் பயணத்தில் கலந்து கொண்டவர்களுக்கான பாராட்டு விழாவும் நடைபெறும்.

இந்த நிகழ்வு கலர் ஒவ் கறேஞ் நிறுவனத்தின் பணிப்பாளர் நாதன் சிவகணநாதன் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி சரித்த உளம்புவ தலைமையில் நடைபெறவுள்ளது.

(எஸ்,10)

# கரந்தனில் வீதி விபத்து இளைஞர் இருவர் படுகாயம்

(கரந்தன்)

கரந்தன் பகுதியில் மோட்டார் சைக்கிள் பின்புறமாக மோதியதில் நீர்வேலியைச் சேர்ந்த எஸ். ரதீபன் (வயது-27 என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவமானது நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது. நீர்வேலியில் இருந்து கரந்தனை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் முன் னாள் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் குறுக்கு வீதியால் திரும்பும் வேளை சைகை காட்டாமல் திரும்பியதனால், பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அதனுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் முகத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(எஸ்)

# மாந்தை கிழக்குப் பிரதேசத்துக்கு உதவி அரசாங்க அதிபர் நியமனம் எப்போது?

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு-மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இதுவரை உதவி அரசாங்க அதிபர் எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் அலுவலகச் செயற்பாடுகளில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகப் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபராக மாற்றலாகிச் சென்றதையடுத்து இதுவரை மாந்தை கிழக்குப் பகுதிக்கு உதவி அரசாங்க அதிபராக எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் வாரத்தில் இரு நாட்கள் கடமைக்கு வருவதாகவும், அவசர தேவை ஏற்படின் தாம் துணுக்காய்க்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயத்தைக் கருத்தில் கொண்டு இப்பிரதேசத்திற்கு உதவி அரசாங்க அதிபர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(110)

# புனித யாகப்பர் ஆலய 150ஆவது யூபிலி திருவிழா



(ஆனைக்கோட்டை)

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் திருநாள் திருப்பலியும், 150ஆவது ஆண்டு யூபிலி விழா நிகழ்வும் நேற்று மிகவும் கோலாகலமாக நிறைவேறியது.

கடந்த 80 நாட்களாக "யேசுவில் மீண்டும் புதிதாய் எழுவோம்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற ஆன்மீகப் புதுப்பித்தல் நிகழ்வின் இறுதி நாளான நேற்றைய தினம் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளாரின் தலைமையில் திருநாள் திருப்பலி இடம்பெற்றது. இத்திருநாள் திருப்பலியில் முதல் முறையாக அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த 33 குருக்கள் ஒரே நேரத்தில் திருப்பலியில் கலந்து கொண்டனர்.

புனித யாகப்பர் ஆலயத்தை கடந்த இரண்டு மாதங்களுக்கு முதல் பொறுப்பெடுத்த அமலமரித் தியாகிகள் சபைக் குருக்கள் நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக நற்கருணைப் பேழையின் திறப்பினை ஆலயப் பங்குத்தந்தை ஆர்.சி.எக்ஸ்.நேசராஜா அடிகளாரிடம் ஒப்படைத்தனர்.

திருப்பலி நிறைவில் அமலமரித் தியாகிகள் குருக்களினால் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. திருச்சுருபமானது மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி அலங்கரிக்கப்பட்ட தேரில் குருநகர் கிராமத்தைச் சுற்றி வீதிவலம் வந்து இறுதி ஆசீர்வாதத்துடன் நிறைவேறியது. (அ)

# சீரற்ற போக்குவரத்தினால் தென்மராட்சியில் பயணிகள் சிரமம்




(சாவகச்சேரி)

போக்குவரத்துச் சேவை தென்மராட்சிப் பகுதியில் கடந்த இரு நாட்களாகச் சீரற்றுக் காணப்பட்டது. இதனால், தொழில் நிமித்தம் பிரயாணம் செய்பவர்களும், பாடசாலை செல்லும் மாணவர்களும் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

கடந்த இரு நாட்களிலும் ஒரு சில பஸ் வண்டிகள் மட்டும் சேவையில் ஈடுபட்டதனால் பஸ் வண்டிகளில் நெரிசல் ஏற்பட்டது. அத்துடன், பாடசாலைச் சேவைகளும் சீரற்றுக் காணப்பட்டதால் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

(19)

## ஆசிரியர் சம்பளம் தாமதம் ஏன்?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தர்மபுரம் பாடசாலையில் ஆசிரியர்களுக்கு இது வரை சம்பளம் வழங்கப்படவில்லை. ஏனைய பாடசாலைகளில் கடந்த 21ஆம் திகதி சம்பளங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பளத்தை எதிர்பார்த்து 36 ஆசிரியர்கள் காத்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

இது பற்றி அதிபரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது கணக்குகளில் ஏற்பட்ட தவறுகளால் சம்பளப் பட்டியல் தயாரிப்பு வேலை இன்னும் நிறைவு பெறவில்லை எனத் தெரிவித்தார்.

(12)

## போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வவுனியாவில் புதிய அலுவலகம்

(கொழும்பு)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வட பிராந்திய அலுவலகம் எதிர்வரும் 1ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலகத்தில் திறந்துவைக்கப்படும் என மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சாள்ஸ் கூறினார்

இதுவரைகாலமும் கொழும்பில் இந்த அலுவலகம் இயங்கி வந்தமையினால் வடமாகாணத்தைச் சேர்ந்த தனியார் பஸ் உரிமையாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவே தனியார் பஸ்களுக்கான வீதி வழி அனுமதிப்பத்திரங்களை வழங்கி வருகின்றது.

# சின்னமடு தேவாலயம் வருடாந்த திருவிழா



(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சின்னமடு மாதா தல யாத்திரை மற்றும் வருடாந்த திருவிழா நாளை ஆரம்பமாகி அடுத்த மாதம் 05 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளதாக பங்குத் தந்தை அருட்திரு யே.அ.அருள்தாசன் அடிகளார் தெரிவித்தார்.

நாளை மாலை 4.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் திருவிழாவில் எதிர்வரும் 04ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நற்கருணை விழாவும், 05ஆம் திகதி காலை 6.30 மணிக்கு முதல் திருப்பலிப் பூசையும் 8.00 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.

பிரயாணத்திற்கான பேருந்து ஒழுங்குகள், தங்குமிட வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஆலயத்தின் பங்குத் தந்தை அறிவித்துள்ளார்.

# கொழும்பு கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி தேர்

(கொழும்பு)

கொழும்பு, கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் இரதோற்சவ பவனி நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. அடியார்கள் காவடி எடுத்தும், தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதையும் இரதோற்சவ பவனியையும் படங்களில் காணலாம். கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் வருடாந்தத் திருவிழா கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா இடம் பெற்றது.





அநியாயத்தை அநியாயத்தால் எதிர்க்க வேண்டிய அவசியமில்லை. அதர்மத்தை அதர்மத்தால் தான் கொல்ல வேண்டும் என்று இல்லை. அநியாயத்தை நியாயத்தாலும், அதர்மத்தை தர்மத்தாலும் ஒழியுங்கள்.

பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## விஷச் சுழலிலிருந்து வெளியேறுதல்

சொற்கள் மிக வலிமையான ஆயுதங்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆவேசமூட்டும் பேச்சுக்களே தேர்தல் வெற்றியைத் தீர்மானித்திருப்பது தெரிகிறது.

கொட்டிய நெல்லை அள்ளிவிடலாம் சொல்லை அள்ள முடியாது என்று முதுமொழி கூறுகிறது. வன்முறையும், இனவாதமும், பழிவாங்கும் உணர்ச்சியும் தூண்டிவிடப்பட்ட ஏராளம் சொற்கள் தேர்தல் வெற்றிக்காகப் பேசப்பட்டிருக்கிறது. இனி அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை கடந்தகால அனுபவத்துடன் ஒப்பிட்டு சிந்திக்க வேண்டியது கற்றறிந்தோர் கடன.

இளைஞர்களிடம் பற்றவைக்கப்படும் ஆவேசம் கட்டுக்கடங்காது உண்டாக்கும் விளைவுகளை உலகில் வேறெந்த நாட்டினரையும் விட நாம் நன்றாக அறிவோம். அழிவுகளையும் வலிகளையும் தந்த வரலாற்றைத் திரும்ப திரும்ப உருவாக்க முயல்வதைக் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டுப் பின்னர் கவலைப்படுவதில் அர்த்தமில்லை.

வன்முறை ஒருபோதும் வன்முறையைத் தணிக்காது என்பதும், பழிவாங்கும் உணர்ச்சியால் யாரையும் தப்பவைக்க முடியாது என்பதும் இப்போது நமக்கு வெறும் வார்த்தை விளக்கங்கள் அல்ல.

நீண்ட போரின் கொடுந்துயர்களை அனுபவித்த பிறகு, மக்களை வன்முறையின்மைக்குப் பழக்கப்படுத்துதல் என்ற மாபெரும் கடமையையே நாமனைவரும் பங்குபோட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

அரசியல் ரீதியாக, கொள்கை ரீதியாக நமக்குள் ஆயிரம் பேதங்கள் இருக்கலாம். அவரவர் நிலைப்பாடுகளில் நின்று வெற்றிக்காக எவ்வளவும் சண்டையிட்டுக் கொள்ளலாம். ஆனால் மீண்டும் இந்த சமூகத்தில் வன்முறை நெருப்புக்குச் சாம்பல் ஊதி விடுவது மீண்டும் ஆபத்தையே விலை கொடுத்து வாங்கும்.

வன்முறையும் பழிவாங்கும் உணர்ச்சியும் எல்லோருக்குள்ளும் இயல்பாக உள்ளதுதான். கொஞ்சம் தட்டிவிட்டாலே அது விசுவரூபம் எடுத்து தன்னழிவையும் பாராது தாண்டவமிடும். தொடர்ந்து அந்த வலியை நம் சமூகத்தால் தாங்கமுடியாது.

நாம் ஒவ்வொருவரும் நமது மனச்சாட்சியுடன் பேசியாக வேண்டும். பழியுணர்ச்சியைத் தீர்த்துக் கொள்வதில் கிடைக்கும் திருப்தியால் எதைச் சாதிக்க நினைக்கிறோம்? இதைக் கேட்பது, யாரையும் குற்றவாளிக் கூண்டிலிருந்து விடுவிப்பதற்காக அல்ல; நடந்த குற்றங்களுக்குப் பிணையெடுப்பும் அல்ல. இது நம் சமூகத்தை காப்பாற்றும், வாழ்வைக் காப்பாற்றும் வழிமுறைக்கான தேடலே.

மன்னிக்க முடியாத மனதோடு நம்மால் நிம்மதியாக வாழ முடியாது; முன்னேற்றகரமான எதிர்காலத்திற்கு நடைபோட முடியாது. பழிக்குப் பழி இரத்தத்திற்கு இரத்தம் என்பது அவற்றின் தொடர்ச்சியைத்தான் குறித்து நிற்கிறது. அவற்றால் நம் வலிகளைத் தீர்க்க முடியாது.

மன்னிப்பு என்பதன் மூலமே வன்முறை மற்றும் அழிவுகள் என்ற விஷச் சுழலிலிருந்து வெளியே வரமுடியும். கடந்தவற்றைத் தோண்டித் தோண்டி கிளறுவதும் பொருமுவதும் நமது மனத் திண்மையின்மையைத்தான் காட்டும்.

மன்னிப்பதே மனத்துணிவுடையோரின் செயலாக முடியும். சமூகத்திற்காக, மக்களுக்காக, அனைவருக்குமாக ஒவ்வொருவரும் அந்த மனத்துணிவு பெறவேண்டும்.

மற்றவர்களிடம் எதிர்பார்ப்பதல்ல; நம்மிடமிருந்தே தொடங்க வேண்டும். அதன்மூலம் மற்றவர்களின் மனச்சாட்சியை எழுச்சி கொள்ள வைக்க முடியும்; வெட்கமுறச் செய்ய முடியும்.

அதுவே, அழிவு வரலாற்றிலிருந்து நம்மை விடுவிக்கும். ஆக்கபூர்வமானவர்களாக நம்மை மாற்றும். மக்கள் அனைவரையும் வாழ வைக்கும்.

- ஆசிரியர்

# இந்தியாவுடனான சீபா உடன்படிக்கை இலங்கை அச்சமடையத் தேவையில்லை

## சர்வதேச நாணயநிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடன் சீபா உடன்படிக்கை செய்து கொள்வது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அச்சம் கொள்ளத் தேவையில்லை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கோஷி மாத்தாய், பட்டயக்கணக்காளர்களுக்காக நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொணடு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார்

சீபா உடன்படிக்கையின் மூலம் இந்திய உற்பத்திகள் இலங்கையின் உள்நாட்டு சந்தையில் கட்டுப்பாடின்றி ஊடுறுவக்கூடிய சாத்தியம் ஏற்படக்கூடும் என்ற கருத்து பிழையானது என்று அவர் தெரிவித்தார்.

இவ்வாறான வாய்ப்புகள் ஏற்படுவது மிகக் குறைவு என்றார். சீபா உடன்படிக்கை பல்வேறு காரணிகளை கருத்திற் கொண்டே உருவாக்கபட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவுடன் சீபா உடன்படிக்கை செய்து கொள்வது தொடர்பில் இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் அச்சம் தெரிவித்திருந்தனர். சீபா உடன்படிக்கையால் இலங்கைக்கு பாரியளவில் பாதிப்புக்கள் ஏற்படலாம் என்று ஜே.வி.பி குற்றம்சாட்டியிருந்தது.

இதனைத் தொடர்ந்தே சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கோஷி மாத்தாய், இதனைத் தெரிவித்திருந்தார். பாரம்பரிய வர்த்தக ஏற்றுமதி பங்காளியுடன் பிராந்திய வர்த்தகம் செய்வதன் முக்கியத்துவத்தை இலங்கையர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

# வடக்கும், தெற்கும் பிளவு என்பதனையே தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன

## யோகராஜன் எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கும், தெற்கும் தொடர்ந்தும் பிளவடைந்தமையையே எடுத்துக்காட்டுவதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தெற்கில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றியீட்டியதுடன், வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டியுள்ளது.

இந்த தேர்தல் முடிவுகள் பாதகமானவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கும் தெற்கும் தொடர்ந்து பிளவடைந்திருப்பதாகவே இந்தத் தேர்தல் முடிவு மீண்டும் வலியுறுத்தியுள்ளது எனவும், இது ஆரோக்கியமான நிலைமையல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்கள் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை வலியுறுத்தி தேர்தலில் வாக்களித்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமது பிரச்சினைக்கு உரியமுறையில் தீர்வு காணப்படவில்லை என்பதனையே வடக்கு மக்கள் தேர்தல் முடிவுகள் மூலம் சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறுப்பினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் வடக்கு மக்கள் ஒப்படைத்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சிறுவர்களை விற்பனை செய்த அறுவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வர்த்தக ரீதியாக சிறுவர்களை விற்பனை செய்த ஆறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

இரண்டு வேறு வேறு சிறுவர் வர்த்தகச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிறந்த சிசுவொன்றும், ஒரு வயது குழந்தையொன்றும் இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மாகாண சுகா தார உத்தியோகத்தர், விற்பனை செய்யப்பட்ட குழந்தை ஒன்றின் தாய், குழந்தையை பணம் கொடுத்து கொள்வனவு செய்த பெற்றோர் ஆகி யோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் பண்டாரவளை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதாகவும், சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

## பெருமளவு வெடிபொருட்கள் வாகரையிலிருந்து மீட்பு

(கொழும்பு)

வாகரைப் பிரதேசத்தில் பாரியளவு வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் சுமார் 20 கிலோ கிராம் எடையுடைய ரி.என்.ரி. வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வெடிபொருட்கள் மீட்கப்பட்ட சம்பவம் பிரதேசத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆயுதக் குழுக்களினால் வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பாதுகாப்புத் தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

முக்கிய பிரபுக்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் நோக்கில் ஆயுதக் குழுக்கள் வெடிபொருட்களை மறைத்து வைத்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக கிழக்கு மாகாணத்தில் பல்வேறு ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் நூலகம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு சிங்கப்பூர் இன்ரநஷ்னல் பவுன்டேசன் நிறுவனத்தினரால் சிறுவர் நூலகமொன்று கையளிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளதாக யாழ். மாநகர சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசுக்கு எதிராக போலிக் குற்றச்சாட்டுக்களை தேர்தல் மூலம் மக்கள் நிரூபித்துள்ளனர்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக சில அரசியல் கட்சிகள் சுமத்தி வந்த போலிக் குற்றச்சாட்டுக்களை மக்கள் நிராகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டின் சில அரசியல் கட்சிகளும் சர்வதேச சக்திகளும் இணைந்து அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் அமைச்சர் மைத்திரிபால சிறிசென வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மஹிந்த சிந்தனைப் பொருளாதாரக் கொள்கையின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களை மீண்டும் ஒரு தடவை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளுக்கு நாட்டு மக்கள் தகுந்த பாடத்தை புகட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 45 தொகுதிகளில் வெற்றியீட்டியுள்ளது.

# அக்கராயன் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி அக்கராயன்குளம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருமுறுகண்டியில் இருந்து நாலாங்கட்டை வரை மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின்கம்பங்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் மிகுதியாகவுள்ள இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அக்கராயன்குளம் கிராமத்திற்கு மின்சாரம் கிடைப்பதில் இழுபறி நிலை காணப்படுகிறது.

அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளில் மின்சாரம் பெறுவதற்கான பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள மரங்கள் தறிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ள நிலையில் மின்சாரக் கம்பங்கள் நாட்டுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அக்கராயன்குளப் பிரதேசத்திற்கு மின்சாரம் கிடைத்தால் இப்பிரதேசத்திலுள்ள மருத்துவமனை, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், எரிபொருள் நிலையம், பாடசாலை கனணிச் செயற்பாடுகள் என்பன தங்கு தடையின்றி மேற்கொள்ள முடியும் என இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, துணுக்காய் பிரதேசத்திலுள்ள சில இடங்களில் மின்கம்பங்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் அம்பலப் பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளும் ஆகிய பிரதேசங்களிற்கு மின்சாரம் கிடைப்பதில் தாமதமாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து விரைவாக எமது பிரதேசத்திற்கு மின்சார வசதிகளை செய்து தருமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (121)

# துணுக்காய் வலயத்தில் 6 பாடசாலைகள் மகிந்த சிந்தனைத் திட்டத்தில் அபிவிருத்தி

(அம்பலப்பெருமாள்)

ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய் கல்வி வலயத்தில் ஆறு பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், யோகபுரம் மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி, மாங்குளம் மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், முத்தையன் கட்டு வலது கரை பாடசாலை என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இப்பாடசாலை அபிவிருத்தி செய்யப்படும்போது இப்பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு தனியாக இயங்கும் என தெரிவிக்கப்படுகிறது. (121)

# விரைவு கணித செய்கைப் போட்டி

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் வலய மட்டத்திலான விரைவு கணித செய்கைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

மாங்குளம் மகாவித்தியாலயத்தில் முற்பகல் 9.00 மணிக்கு இப்போட்டிகள் தொடங்கவுள்ளன.

ஏற்கனவே துணுக்காய் வலயத்திலுள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய கோட்ட மட்ட ரீதியில் இப்போட்டிகள் நடைபெற்று மாணவர்கள் வெற்றியீட்டிய நிலையில், இன்றைய வலய மட்டப் போட்டியில் பங்குகொள்கின்றனர்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொள்வோர் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் குழு தெரிவித்துள்ளனர். (121)

# யாழ். மாவட்டத்தில் 272 மில்லியனில் 13 வைத்தியசாலைகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ். மாவட்டத்திலுள்ள 13 பிரதேச வைத்தியசாலைகள் 272 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டும், புதிதாக அமைக்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் தகவல் தருகையில், வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை 60 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், வைத்தியர்கள் தங்குவதற்கான விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளதுடன் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் 30 மில்லியன் ரூபா செலவில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவும், கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் 25 மில்லியன் ரூபா செலவில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

யுத்தம் காரணமாக சேதமடைந்திருந்த புங்குடுதீவுப் பிரதேச வைத்தியசாலை 10 மில்லியன் ரூபா செலவிலும், அம்பன் பிரதேச வைத்தியசாலை 27 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், மானிப்பாய், கொடிகாமம், வேலணை, கரவெட்டி, வட்டுக்கோட்டை, கோண்டாவில், இளவாலை ஆகிய ஏழு பிரதேச வைத்தியசாலைகளில் தலா 15 மில்லியன் ரூபா செலவில் மகப்பேற்று விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை 27 மில்லியன் ரூபா செலவில் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாக இளவாலை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் தலா எட்டு மில்லியன் ரூபா செலவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.





யாழ்ப்பாணம் புல்லுக்குளம் நவீன மயப்படுத்தும் திட்டத்தில் அதன் முதல் கட்டமாக கழிவு நீர் அகற்றலுக்கான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்படடுள்ளதைக் காணலாம்.

## பிரம்மோற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்தருகேணியடி காளியம்பாள் தேவஸ்தான பிரம்மோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் மகோற்சவப் பெரு விழாவில் எதிர்வரும் முதலாம் திகதி தேரோற்சவமும், மறு நாள் ஆடிப் பூரத்தன்று தீர்த்தோற்சவமும் மாலை கொடி இறக்குதலும் இடம் பெறும்.

## புற்றுநோய் சிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விரைவில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. ஆரம்ப நிலையில் புற்று நோய் என இனங் காணப்பட்ட இருபாலருக்கும் சிகிச்சை அளிப்பதற்கான வசதிகளைக் கொண்டதாக இந்தச் சிகிச்சை நிலையம் அமைக்கப்படவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி ந. ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (10)

## தேங்காய் விலையில் வீழ்ச்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேங்காய் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த சில மாதங்களாக மேற்படி மாவட்டத்தில் 40 - 50 ரூபாவாக தேங்காய் விற்பனை செய்யப்பட்டது.

எனினும், புதுக்குடியிருப்பு, கோம்பாவில் பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதன் பின்னர் தற்போது இம்மாவட்டத்தில் 20 முதல் 25 ரூபாவாக தேங்காய் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் இப்பிரதேச மக்கள் தாம் தேவையான அளவு தேங்காயை கொள்வனவு செய்யக் கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். (101)

# பரந்தன்-முல்லை வீதிப் பேருந்துகளில் பயணிகளிடம் திருடர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

பரந்தன் முல்லை வீதியில் பயணிக்கும் பயணிகள் பேருந்துகளில் அண்மை நாட்களாக திருடர்களின் திருட்டு நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும், இதனால் பயணிகள் எடுத்துச் செல்லும் பணம், நகை உட்பட பெறுமதியான பொருட்களைத திருடர்களிடம் பறிகொடுத்து விட்டு பயணிகள் அவலமுறும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் குறித்த பகுதி பயணிகள் பணம், நகை உட்பட பெறுமதியான பொருட்களை பேருந்துகளில் எடுத்துச் செல்ல அச்சம் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீதியில் பயணிக்கும் பயணிகள் பேருந்துகளில் குறிப்பாக, பரந்தனிற்கும் மூன்றாம் கட்டைக்கும் இடைப்பட்ட மூன்று கிலோ மீற்றர் பகுதியிலேயே இவ்வாறான அதிகமான சம்பங்கள் நடைபெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பேருந்துகளில் அளவுக்குதிகமான பயணிக்கும் பயணிகளின் பிராயணப் பைகள், பிளேட் போன்ற கூரிய ஆயுதத்தினால் கீறப்பட்டு அதிலிருக்கும் பணம் மற்றும் நகைகள் முதலியவை திருடர்களால் களவாடப்பட்டுச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றுது.

இவ்வாறு ஒரு பெண் தனது குடும்பத்தாருக்கு திருமண வீடு ஒன்றிற்குச் செல்வதற்காக இரவல் வாங்கி வந்த நகைகளை திருடர்களிடம் பறிகொடுத்த சம்பவம் உட்பட பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகப் பயணிகள் தெரிவிக்கின் றனர். (பா)

# தவணைப் பரீட்சைகள் ஆரம்பம்

(அம்பலப்பெருமாள)

துணுக்காய் வலய பாடசாலைகளின் 2ஆம் தவணைப் பரீட்சைகள் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. துணுக்காய் கல்வி வலயத்தில் இயங்கும் 56 பாடசாலைகளில் இப்பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை அறிவித்துள்ளது. (121)

# முல்லை வலய பாடசாலைகளின் பரீட்சைத் திகதியில் மாற்றம்

(முல்லைத்தீவு)

கடந்த சனிக்கிழமை 23ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வலய பாடசாலைகளில் இரண்டாம் தவணைக்கான பரீட்சைகள் கடந்த 20ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன. இப்பரீட்சைகள் 27ஆம் திகதி வரை நடைபெற்று இரண்டாம் தவணை விடுமுறை 5ஆம் திகதி விடப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

உள்ளூராட்சித் தேர்தல் 23ஆம் திகதி நடைபெற்ற காரணத்தால் அன்றைய தினத்துக்குரிய பரீட்சைகளே 28ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (17)

# யாழ். மாவட்டத்தில் 60,842 வீடுகள் அமைப்பதற்கு இனங்காணப்பட்டுள்ளது

## அரச அதிபர் தகவல்



(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் மீள்குடிய மர்ந்த மக்களுக்காக புதிதாக நிறுவுவதற்கும், வீடுகளைத் திருத்துவதற்குமாக 60,842 வீடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதில் 13, 350 வீடுகள் ஏற்கனவே உலக வங்கியினூடான நிதியின் கீழ் அரசினால் வழங்கப்பட்டு கட்டட வேலைகள் அனைத்தும் நிறைவடையும் நிலையிலுள்ளன.

மேலும் சுமார் 2385 வீடுகளை நிறுவும் பணி அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 1700 வீடுகள் வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இந்திய உதவியின் கீழ் அரசினால் இம் மாவட்டத்திற்கென 7400 வரையான வீடுகள் முற்றாக அழிந்த வீடுகளை நிறுவுவதற்கும், சேதமாக்கப்பட்ட வீடுகளைத் திருத்துவதற்குமென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டமும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, மேற்கூறிய திட்டங்களூடாக மொத்தமாக யாழ். மாவட்டத்தில் 23,135 குடும்பங்கள் தமது வீடுகளைத் திருத்துவதற்கும், நிறுவுவதற்குமான முற்றிலும் இலவசமான உதவியை எய்தியுள்ளனர்.

இதைவிட வருமானம் கூடிய குடும்பங்கள் சுமார் 20 இலட்சம் வரை பெறுமதியான கடன் தொகையையும், குறைந்த வட்டியுடன் இம் மாவட்டத்திலுள்ள வங்கிகளூடாகப் பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்தார். (எஸ்)

## உப அலுவலகம் புனரமைப்பு

(தெல்லிப்பழை)
தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஜே-225 கொல்லன்கலட்டியில் அமைந்திருந்த வலிவடக்குப் பிரதேச சபையின் உப அலுவலகத்தைப் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

'என்றிப்' நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ள இந்த அலுவலகத்திற்கு சுமார் 8 இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.





சிறுவர் புற்றநோய் வைத்தியசாலை அமைப்பதற்காக நிதி திரட்டும் வகையில் தென்பகுதியில் இருந்து ஆரம்பமான நடைபயணம் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. நேற்றுக்காலை யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இவர்கள் வரவேற்கப்படுவதையும், பயணத்தில் கலந்துகொண்டோரையும காணலாம்.

# ஐந்து வீதிகள் புனரமைப்பு பிரதேச சபை நடவடிக்கை

(வடமராட்சி)
வலி. கிழக்கு பிரதேச சபை 5 வீதிகளைப் புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வலி கிழக்குப் பிரதேச சபைச் செய லாளர் திருமதி ஜெ.சோமராஜ் மேற்கொண்டு வருகின்றார்.

இந்த வகையில் அச்சுவேலி சந்தை உள்ளக வீதி, கோப்பாய் சரவணபவானந்தா பாடசாலை வீதி, கோப்பாய், கொட்டைக்காடு மயான வீதி, உரும்பிராய் சிவன் வீதி, நீர்வேலி வீரபத்திரர் சன சமூக நிலைய் வீதி என்பன விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. (100)

# கற்சிலைமடுப் பிரதேசத்திற்கு மின்சார வசதிகள் இல்லை

(ஒட்டுசுட்டான்)
ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கற்சிலைமடுப் பிரதேசம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை என இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மக்கள் மீளக் குடியமர்ந்து ஒரு வருடகால மாகியும் இதுவரை மின்சார இணைப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு பிரதேசங்களில் மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், ஒட்டுசுட்டானிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கற்சிலைமடுப் பகுதிக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து, இப்பிரதேசத்திற்கான மின்சார வசதியைப் பெற்றுத் தருமாறு கற்சிலைமடு வாழ் மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (101)

புலம்பெயர்ந்து வாழ்கின்ற எங்கட வடபகுதிச் சனங்கள் யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களை இலக்கு வைத்துக்கொண்டு பெரும் தொகையாக இஞ்சை வந்துள்ளனர்.

இந்து, கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்தவர்கள் இரு பகுதியினரும் வந்து குவிஞ்சிருக்கினம் எண்டுதான் சொல்லவேணும்.

இந்துக்கள் நயினாதீவு, மாவிட்டபுரம், செல்வச்சந்நதி, நல்லூர் திருவிழாக்களை ஒட்டியும் கிறிஸ்தவர்கள் குருநகர் பகுதியில் உத்தரியமாதா, புனித யாகப்பர் ஆலய 150 ஆவது யூபிலிக் கொண்டாட்டங்கள். அதோட பாசையூர் அந்தோனியார், மடுமாதா திருநாட்கள் நடைபெறுவதைப் பயன்படுத்தி வந்திருக்கினம்.

அதுவுமில்லாமல் இந்த மாதங்களில் அந்த நாடுகளில வேனில் கால விடுமுறைகளும் கிடைச்சதால வந்திருக்கினம்.

உப்பிடி வந்தவயள் வந்தோடன செய்த வேலை என்னெண்டு தெரியுமே! இஞ்சையுள்ள சலூனுகளுக்கு படையெடுத்ததுதான். ஏனெண்டா இஞ்சை நூறு நூற்றி ஐம்பது ரூபாக்கு அலுவல முடிச்சுக் கொள்ளலாமெல்லே!

அங்கையெண்டா இலங்கைக் காசுக்கு ஆயிரத்து ஐநூறு ரூபா ரெண்டாயிரம் ரூபாவெல்லே விட்டுக் கட்டவேணும்.

உப்பிடித்தான் இஞ்சை வந்தினமெண்டா சப்பாத்துகள், களிசான், சேட்டுக்கோட்டுகளும் வாங்கிக் கொண்டு போவினம்.

இதையும்விட இன்னொரு விசயம் இருக்கு. அதுதான் பல்லுப் புடுங்கிறது! அந்த நாடுகளில பல்லுப் புடுங்கிறதுக்கு செய்யிற செலவில இஞ்சை வந்து இனசனங்களைப் பாப்பதோட அதுகளுக்கு கொடுக்கிற அன்பளிப்புகள், போக்குவரவுச் செலவுகளையும் சமாளிச்சுப் போடலாமெண்டாப் பாருங்கோவன்?

இப்ப இஞ்சையுமென்ன? போகிற போக்கைப் பாத்தா இன்னும் அஞ்சு பத்து வருசங்களில சம்பளமும் ஆயிரத்தில் இருந்து லட்சக் கணக்காகவும், வைத்திய கல்விச் செலவுகளும், உணவு, உடை மாதிரி அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் வெளிநாடுகளைப்போல வந்திடும்.

உந்தப் பவுண், காணி விலைகளைப் பாத்தீங்களே! ஒரு பவுண் பத்துரூபா வித்த காலமும் இருந்தது. அதாலதான் எங்கட பேச்சுத் தமிழில பத்து ரூபா ஒரு பவுண் எண்டு சொல்லுறதையும் கேட்டிருக்கிறம்.

ஐந்து ரூபா போதும் ஒரு பத்துப் பேர் அடங்கிய பெரிய குடும்பமொண்டுக்கு ஒருநாள் செலவுக்கு. அப்ப நாட்கூலியும் எத்தினை மூண்டு நாலு ரூபாதான?

இனி அந்தக் காலம் திரும்பி வருமோ? அந்தக் காலத்துப் பொருட்களின் தரமும் அப்பிடி! இப்ப காசுதான் கூட, பொருளுகள் நிண்டுழைக்காது.

இந்தக் கால மனிசரைப்போல எல்லாம் றெடிமேட்டாப் போச்சுப் பாருங்கோ!



# இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியில் மாங்குளம் மகா வித்தியாலய அபிவிருத்தி

(அம்பலப்பெருமாள்)
முல்லைத்தீவு, மாங்குளம் மகா வித்தியாலயம் இந்திய அரசின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரால் அண்மையில் இப்பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்ட நிலையில் மாணவர்கள் பெருமளவில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முதன்மைப் பாடசாலைகளில் ஒன்றான மாங்குளம் மகா வித்தியாலயம் கடந்த யுத்த காலத்தில் பேரழிவுகளைச் சந்தித்த நிலையில் இந்திய அரசின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. (121)

# புற்றுநோய் வைத்தியசாலை நிதி சேகரிப்பு நடைபவனிக்கு சாவகச்சேரியில் வரவேற்பு

(சாவகச்சேரி)
யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுவர் புற்றுநோய் சிகிச்சைப் நிலையம் அமைப்பதற்கென நிதி சேகரிக்கும் நோக்குடன் தென்னிலங்கையிலிருந்து நடைப் பயணமாக வந்த குழுவினர் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு சாவகச்சேரியை வந்தடைந்தபோது சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் மற்றும் பொலிஸ் இராணுவ அதிகாரிகள் இணைந்து மகத்தான வரவேற்பளித்தனர்.

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா சிற்றுண்டி வழங்கிக் கௌரவித்தார்.

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் கணேசலிங்கம் தலைமையில் வங்கி உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் அவர்களுடன் இணைந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தனர். (11)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(26.07.2011 - செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆடி 10 ஆம் நாள்.
இராகுகாலம் 3.02-4.32, சுபநேரம் 10.32 -12.02,
நட்சத்திரம் ரோகிணி முழுவதும்
திதி: ஏகாதசி பி.இ. 2.28 வரை, ஏகாதசி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:- பணக்கஷ்டம், குடும்பததில் கவலை, அதிகாரப் பகிர்வு, விருந்தினர் வருகை, தெரு விபத்து.

ரிஷபம:- பணவரவு, நண்பர் தொல்லை, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, ஆனந்த கோலாகலம்.

மிதுனம் :- குடும்பத்தில் சந்தோசம், தேக ஆரோக்கியம், பணவரவு, நண்பர் உதவி, காரிய சித்தி.

கடகம்:- பணவரவு, குடும்பத்தில் குதூகலம், மன நிம்மதி, அதிகாரப் பகிர்வு, களவுபோகலாம்.

சிம்மம்:- பணக் கஷ்டம், மனச்சஞ்சலம், குடும்பத்தில் குழப்பநிலை, தேகநலம் பாதிப்பு, திருடர் பயம்.

கன்னி :- பணவரவு, குடும்பத்தில் குதூகலம், மன நிம்மதி, அதிகாரப் பகிர்வு, களவுபோகலாம்.

துலாம் :- பணக் கஷ்டம், மனச்சஞ்சலம், குடும்பத்தில் சலனம், கடன் தொல்லை, உறவுக்குள் பகை.

விருச்சிகம்:- காரியசித்தி, பண வரவு, உறவினர் வருகை, குடும்பத்தில் ஒற்றுமை, மன மகிழ்ச்சி.


தனுசு:- குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, நண்பர் உதவி, விருந்தினர் வருகை, மன நிம்மதி.

மகரம:- மனச் சஞ்சலம், நித்திரையின்மை, உறவுக்குள் பகை, வீண் அலைச்சல், விபத்து.

கும்பம் :- பண வரவு, குடும்பத்தில் சந்தோஷம், மன மகிழ்ச்சி, நண்பர் தொல்லை, விருந்தினர் வரவு.

மீனம்:- பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், அதிகாரப் போட்டி, விபத்து.





30 வருடங்களின் பின்னர் காங்கேசன்துறையில் நடைபெற்ற யாழ். மாவட்ட கடற்படை கூடைப்பந்தாட்ட ஆண், பெண் அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ ஆட்டத்தில் பங்குகொண்ட யாழ். மாவட்ட பெண்கள் அணியையும், விளையாடிக் கொண்டிருக்கும் ஆண்கள் அணியையும் காணலாம். இந்தப் போட்டிகளில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட பெண்கள் அணி 45 : 18 எனவும், கடற்படை கூடைப்பந்தாட்ட ஆண்கள் அணி 59 : 47 எனவும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# எழுவைதீவு முருகவேளுக்கு இரண்டு தங்கப் பதக்கம்




(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையான மெய்வல்லுனர் போட்டி அண்மையில் வவுனியா கல்வியற்கல்லூரியில் இடம்பெற்றது. இதில் யாழ்.எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவர்கள் இரு தங்கப்பதக்கங்களையும் ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் ஒரு வெண்கலப்பதக்கத்தையும் வென்று சாதனை படைத்துள்ளனர்.

இதில் 11 வயதுப்பிரிவு நீளம் பாய்தலில் ஜே.ஜெனிற்றா தங்கப் பதக்கத்தையும் சிறந்த மைதான வீராங்கனைக்குரிய கேடயத்தையும் பெற்றுக் கொண்டார். 15 வயதுப்பிரிவு நீளம் பாய்தலில் ந.தர்சிகா வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். 17 வயதுப்பிரிவு உயரம் பாய்தலில் க.தனுயன் தங்கப்பதக்கத்தையும் சிறந்த மைதான வீரனுக்குரிய கேடயத்தையும் பெற்றுக் கொண்டார். 19 வயதுப் பிரிவு அரை மரதன் போட்டியில் ஜே.மரிய கொறற்றி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார்.

# மாற்றுவலுவுள்ளோர் போட்டி வெற்றி பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 24ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மாற்றுவலுவுள்ளோருக்கிடையில் நடாத்தப்பட்ட முச்சக்கரவண்டி மற்றும் துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியோரின் பெயர் விபரங்கள் வெளியிடப் பட்டுள்ளது.

இரண்டு போட்டிகளிலும் இரு பிரிவுகளில் நடாத்தப்பட்ட இருபாலருக்குமான போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:

40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டிப் போட்டியில் வெற்றியீட்டியோர் : வி. தனுசன், பி. பாலசுப் பிரமணியம், ஆர் பிரதீபன்.

40 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான துவிச்சக்கர வண்டிப் போட்டியில் வெற்றியீட்டியோர். வி. நீலுகா, ரி. புஸ்பநிதி, எஸ். சுதா.

40 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான முச்சக்கர வண்டிப் போட்டியில் வெற்றியீட்டியோர் எஸ். தட்சனாமூர்த்தி, என். சோதிலிங்கம், ஜோன் கெனடி, கே. இராஜேந்திரன், அன்ரே பிரதீபன், கே. டனுஷன், பி. பரமகுமார், ஆர். சிறிஸ்கந்த ராஜா, எக்ஸ் மோகன் ராஜா, கே. நாகராஜா, ரி. பாஸ்கரன்.

40 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான முச்சக்கரவண்டிப் போட்டியில் வெற்றியீட்டியோர் : எஸ். ஜெயராணி.

40 வயதுக்குப்பட்ட ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டிப் போட்டியில் வெற்றியீட்டியோர் : ஆர். உதயகுமார், ஏ. பிரகாஷ், தே. பாலன், என். தயான், ஆர். மகேந்திரன், ரி. பிரேமசீலன், எஸ். பாஸ்கரன், கே. கிருஷ்ண குமார், எம். திருபரன்.

40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டிப் போட்டியில் வெற்றியீட்டியோர் : கே. சிவலிங்கன், ஏ. தம்பையா, என். மகேஷ்வரன்.

20 வயதுக்குப்பட்ட ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டிப் போட்டியில் வெற்றியீட்டியோர் : கி. விதுசன், எம். சங்கீர்தன். ([illegible]ஸ்)

## காயமடைந்தார் கௌதம் கம்பீர்




(லண்டன்)

இங்கிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியின்போது, இந்திய கிரிக்கெட் அணி வீரர் கௌதம் கம்பீர் காயமடைந்ததால் அவசரமாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

லோட்ஸ் மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியின் 4 ஆவது நாளான்று இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தபோது, மட் பிரையோர் அடித்த பந்தொன்று களத்தடுப்பாளர் கௌதம் கம்பீரைத் தாக்கியது.

அதையடுத்து அவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு எக்ஸ்ரே பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இருந்தபோதும் இரண்டாவது இனிங்சிலும் அவர் துடுப்பாட்டம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின்போது உபாதைக்குள்ளான மூன்றாவது இந்திய வீரர் கம்பீர் ஆவார்.

வேகப்பந்துவீச்சாளர் சகீர்கான் முதல்நாள் ஆட்டத்தின்போது காயமடைந்தார். நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நிலையில் முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியமை குறிப்பிடத்தக்கது.





யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் மைலோ நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட மைலோ கிண்ண வலைப்பந்தாட்ட 12 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், இரண்டாமிடத்தை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியும் பெற்றுக் கொண்டதுடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.



# முதல் டெஸ்டில் இந்தியா தோல்வி

(லண்டன்)

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 196 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.

முன்னதாக ஒரு விக்கெட் இழப்புக்கு 80 ஓட்டங்கள் என்ற நிலையில் தொடர்ந்து ஆடிய இந்திய அணி அண்டர்சனின் வேகப்பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது தடுமாறியது.

நேற்றைய ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் டிராவிட் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். துடுப்பாட்டத்தில் லக்ஷ்மன் 56, ரெய்னா 78 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டியை சமநிலையில் முடிக்க ரெய்னா போராடினார். ஆனால் இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் இந்திய துடுப்பாட்ட வரிசையைத் தகர்த்து, முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற அடிகோலினர்.

முன்னதாக முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அணி 474 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இந்தியா முதல் இனிங்ஸில் 286 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராகுல் டிராவிட் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வெற்றி மூலம் 4 போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இரட்டைச் சதம் பெற்ற பீற்றர்சன் தெரிவானார்.

# விளையாட்டு செய்திகள்

## கோபா அமெரிக்க கால்பந்து உருகுவே அணி சம்பியனானது



(மென்டோசா)

கோபா அமெரிக்க கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் லூயிஸ் சுராஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் உருகுவே அணி 3-0 என்ற கோல் கணக்கில் பராகுவேயைத் தோற்கடித்து கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

ஆர்ஜென்டீனாவில் நடைபெற்றுவந்த ஆண்களுக்கான கோபா அமெரிக்க கால்பந்து தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உருகுவே, பராகுவே அணிகள் மோதிக் கொண்டன.

ஆட்டம் தொடங்கி 12ஆவது நிமிடத்தில் உருகுவே வீரர் லூயில் சுராஸ் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு அசத்தினார். இதனால் இடைவேளைக்கு முற்பட்ட நேரத்தில் உருகுவே அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் தொடங்கி மிகவும் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தவேளை ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் உருகுவே வீரர் டியாகே போளன் தனது அணிக்காக கோலொன்றைப் போட உருகுவே அணி 3-0 என்ற கோல் கணக்கில் பராகுவேயைத் தோற்கடித்து கிண்ணத்தை தனதாக்கியது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் பெரு-வெனிசுலா அணிகள் மோதின. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் பெரு அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெனிசுலாவை வீழ்த்தி 3ஆவது இடம் பெற்றது. பெரு அணி தரப்பில் வில்லியம் கிரோக் 41ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். பாலோ கிர்ரெரோ 64, 89 மற்றும் 90ஆவது நிமிடங்களில் தொடர்ந்து கோல் அடித்து ஹாட்ரிக் சாதனை படைத்தார். வெனிசுலா அணியில் ஜுயன் அரங்கோ 79ஆவது நிமிடத்தில் பதில் கோல் திருப்பினார். வெனிசுலா வீரர் தாமஸ் ரின்கான் முரட்டு ஆட்டம் காரணமாக 58ஆவது நிமிடத்தில் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

## ஆசிய கிண்ண கிரிக்கெட் அட்டவணையில் மாற்றம்

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள முக்கோண ஒருநாள் தொடருடன் ஆசிய கிண்ணப் போட்டி அட்டவணை குறுக்கிடுவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஆசிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் இந்த முக்கோணத் தொடரில் ஆஸி. அணியுடன் இலங்கை, இந்திய அணிகளும் பங்கேற்கின்றன. அவுஸ்ரேலிய முக்கோணத் தொடர் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி முடிவடைகிறது.

இதனைத் தொடர்ந்து மார்ச் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை ஆசிய கிண்ணத்தை நடத்த அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. முன்னதாக ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி மார்ச் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதிவரையே நடை பெறவிருந்தது.

எனினும், போட்டி திட்டமிட்டபடி டாக்காவில் நடைபெறும் என்றும் ஏனைய திட்டங்களில் மாற்றம் இல்லை என்றும் ஆசிய கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

## டெக்கானை விற்கப்பேச்சு

ஐ.பி.எல்.லில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவரிடமும், இந்தியாவில் உள்ள முன்னணி நிறுவனத் திடமும் விற்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

டெக்கான் கிரேனிக்கல் நிறுவனத்தில் உரிமையில் உள்ள அந்த அணியை 200 மில்லியன் டொலருக்கு விற்க திட்டமிட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

டெக்கான் சார்ஜர்ஸ் அணி கடந்த 2008 ஆம் ஆண்டு ஹைதராபாத்தை தலைமையகமாகக் கொண்ட நிறுவனத்தினால் 107.01 மில்லியன் டொலருக்கு வாங்கப்பட்டது. இந்த அணி தனது முதலாவது தொடரில் மோசமாக செயல்பட்டு கடைசி இடத்தையே பிடித்தது. எனினும், 2009 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடத்த தொடரில் சாம்பியன் பட்டத்தை வென்றது.

## மறுக்கிறது ஐ.சி.சி

(டுபாய்)

ஸ்ரீவோவின் கருத்துக்கு சர்வதேச கிரிக்கெட் மறுப்புத் தெரிவித்துள்ளது.

வீரர்களை சூதாட்ட தரகர்கள் தொடர்பு கொள்வது சமீபகாலங்களில் வெகுவாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் சூதாட்ட தரகர்கள் 56 வீரர்களை அணுகியதாக ஸ்ரீவோ அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதனை சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைமைச் செயல் அதிகாரி ஹாரூன் லோர்கட் மறுத்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், இந்தப் புள்ளி விவரத்தை ஸ்ரீவோ எங்கு இருந்து பெற்றார் என்பது எனக்கு தெரியாது. இதுபோன்ற தகவல்கள் எதையும் நாங்கள் வெளியிடவில்லை எனத் தெரிவிததார்.

## பீபா தலைமைப் பதவிக்கு போட்டியிட்ட மொகமட் பின் ஹமாமிற்கு வாழ்நாள்தடை

ஆசிய கால்பந்து கூட்டு சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பீபா) தலைமைப் பதவிக்கு போட்டியிட்டவருமான மொஹமட் பின் ஹமாமுக்கு ஊழல் குற்றச்சாட்டின் பேரில் வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பீபா ஒழுக்காற்றுக் குழு கடந்த இரண்டு நாட்கள் நடத்திய விசாரணையைத் தொடர்ந்து கட்டாரைச் சேர்ந்த 62 வயதான ஹமாமுக்கு இந்த வாழ்நாள் தடையை விதித்துள்ளது.

இதன்படி ஹமாம் எதிர்வரும் காலங்களில் உள்நாட்டிலோ சர்வதேச அளவிலோ கால்பந்து தொடர்பான எந்த நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது என பீபா ஒழுக்காற்றுக் குழுவின் பிரதித் தலைவர் பெட்ரஸ் டமனுப் தெரிவித்தார்.

கடந்த 107 வருட பீபா வரலாற்றில் அதன் உயர் பதவியில் உள்ள ஒருவருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்தத் தடைக்கு எதிராக தம்மாலான அனைத்து விதிகளையும் பயன்படுத்தி மேன்முறையீடு செய்யப் போவதாக பின் ஹமாலின் சட்ட ஆலோசனைக் குழு அறிவித்துள் ளது.

இது குறித்து அந்த குழு விடுத்துள்ள அறிக்கையில், பீபா ஒழுக்காற்றுக் குழு ஒரு சில ஆதாரங்களை மாத்திரம் பயன்படுத்தியே இந்தத் தடையை விதித்துள்ளது. இந்த ஆதாரங்களின் நம்பகத் தன்மை குறித்து விரிவான ஆய்வு நடத்தி மேன்முறையீடு செய்யவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

பீபா தலைமை பதவிக்கு செப் பிளாட்டருடன் போட்டியிட்ட மொஹம்மத் பின் ஹமாம் தமக்கு ஆதரவாக வாக்களிப்பதற்காக அரேபிய நாட்டு கால்பந்து சம்மேளனங்களுக்கு 40,000 டொலர்களை இலஞ்சமாக வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டார். இதனைத் தொடர்ந்து அவர் தலைமைப் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். இதனால் செப் பிளாட்டர் போட்டி இன்றியே பீபா தலைவராக தெரிவானார். இந்த குற்றச்சாட்டின் பேரில் பீபா உதவித் தலைவர் ஜக் வோனர் தமது பதவியை ராஜினாமா செய்தார். இத னால் அவர் மீது ஒழுங்கு விசாரணை நடத்தப்படவில்லை.

இந்நிலையில் இதே குற்றச்சாட்டின் பேரில் கரேபின் கால்பந்து சம்மேளன அதிகாரிகளான டெப்பி மின் குல் மற்றும் ஜேசன் சில் வெஸ்டர் மீது கால்பந்து தொடர்பில் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட பீபா ஒழுக்காற்று குழு ஓர் ஆண்டு தடை விதித்துள்ளது.

## போட்டிக் களத்தில் மோதிக் கொண்ட பிரான்ஸ் வீரர்களுக்கு தற்காலிகத் தடை

போட்டிக் களத்தில் மோதிக் கொண்ட பிரான்ஸ் ஓட்ட வீரர்களான மஹ்டி பாலா மற்றும் மஹ்டின் மெகிஸ்ஸி பெனபாட் இருவருக்கும் அந்நாட்டு மெய்வல்லுநர் சங்கம் போட்டித் தடை விதித்துள்ளது.



மொனாகோவிலில் நடைபெற்றுவரும் டையமன்ட் லீக் போட்டியின் 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை பங்கேற்ற இருவரும் போட்டி முடிவில் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில் ஒருவரை ஒருவர் மோதிக் கொண்டனர்.

இதன்னை அடுத்து அந்த போட்டியில் பங்கேற்ற நியூசிலாந்து வீரர் இருவரையும் விலக்கினார்.

இந்த போட்டியில் கென்ய வீரர் சிலாஸ கில்லகாட் முதலிடத்தை பிடித்தார்.

மோதலில் ஈடுபட்ட பிரான்ஸ் வீரர்கள் 9, 11 ஆவது இடங்களை பிடித்தனர். போட்டி முடிவில் பாலா மற்றைய பிரான்ஸ் வீரர் பெனபாட்டிடம் ஏதோ சொல்ல அதனைத் தொடர்ந்து பெனபாட் அவரை தலையால் முட்டினார்.

இதனைத் தொடர்ந்து இருவருக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது. அரங்கில் உள்ளோர் இந்த மோதலைப் பார்த்து கரகோசம் எழுப்பினர். எனினும் நியூசிலாந்து வீரர் இருவரையும் விலக்கிவிட்டார்.

இந்நிலையில் இருவருக்கும் இடையே தவறுதலான புரிதல் காரணமாக இந்த மோதல் ஏற்பட்டதாகவும் இருவரும் இந்த சம்பவத்திற்காக மன்னிப்பு கேட்டதாகவும் பிரான்ஸ் மெய்வல்லுநர் சம்மேளன தொழில் நுட்ப இயக்குனர் கானி யலுஸ் தெரிவித்தார்.

எனினும் போட்டிக் களத்தில் மோசமாக செயற்பட்ட மேற்படி வீரர்களுக்கு பிரான்ஸ் மெய்வல்லுநர் சம்மேளனம் தற்காலிக போட்டித் தடை விதித்துள்ளது. அத்துடன் வரும் 8 நாட்களுக்குள் இருவர் மீது ஒழுங்கு விசாரணை நடத்தப்படும் என பிரான்ஸ் மெயல்வல்லுநர் சம்மேளனத் தலைவர் பெர்னாட் அம்சலம் குறிப்பிட்டுள்ளார்.



லோர்ட்ஸில் நடைபெற்று வரும் இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் 4ஆவது நாளில் மதிய உணவு இடைவேளையின்போது மைதானத்தில் இந்திய, இங்கிலாந்து முன்னாள் தலைவர்கள் வலம் வந்து காட்சி தந்தனர். இரு அணிகளுக்குமிடையிலான 100ஆவது டெஸ்ட் போட்டியைக் கௌரவிக்கும் முகமாகவே இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பேஸ்புக்கிலும் சூதாட்டம்

கிரிக்கெட் போட்டியில் சூதாட்ட பிரச்சினை அவ்வப்போது எழுந்து அமுங்கி போவது வாடிக்கையானதாகும். இதுவரை சூதாட்ட தரகர்கள் வீரர்களை விருந்து நிகழ்ச்சி மற்றும் வீரர்களுக்கு வேண்டியவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அணுகி வந்தனர். ஆனால் தற்போது வீரர்களை தொடர்பு கொள்ள தரகர்கள் புதிய வழிமுறையை பின்பற்ற தொடங்கி உள்ளனர். சமுதாய இணைய தளமான பேஸ்புக மூலம் வீரர்களுக்கு, தரகர்கள் தூண்டில் போடுவதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. இந்த தரகர்களின் செயற்பாடுகளை சர்வதேச கிரிக்கெட் சபை உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்று இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளில் இலங்கை ஒத்துழைப்புடன் செயற்படுகிறது

## நோர்வே பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கை ஒத்துழைப்புடன் செயற்படுவதாக நோர்வேக்கான இலங்கைத் தூதுவர் ரொட்னி எம்.பெரேரா குறிப்பிடுகிறார். நோர்வே பிரதமர் யென்ஸ் ஸ்டோன்டன்பேர்க்குடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் ஒஸ்லோவில் 91 பேர் உயிரிழப்பதற்கு காரணமாகவிருந்த தாக்குதலுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கண்டனத்தையும், அனுதாபச் செய்தியையும் பிரதமர் ஸ்டோன்பேர்க்கிடம் அவர் தெரிவித்தார். தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து ஒஸ்லோவில் நடத்தப்பட்ட சமய நிகழ்வில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. நோர்வே அரச அதிகாரிகள் உள்ளிட்ட அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அரசாங்கம் வழங்கியுள்ள தீர்வு திருப்தியடையாத விரிவுரையாளர்கள்

(கொழும்பு)

தொழிற்சங்க நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் அரசாங்கம் வழங்கியுள்ள தீர்வு குறித்து திருப்தியடைய முடியாது என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

விரிவுரையாளர்களுக்கு வழங்குவதாக இணக்கம் தெரவிக்கப்பட்ட சம்பளத்துடன் நிபந்தனையுடன் கூடிய ஆய்வுக்கான கொடுப்பனவொன்று உள்ளடக்கப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹீம் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளமை குறித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் நவரத்ன தெரிவிக்கையில் அரசாங்கம் பெற்றுக் கொடுத்த தீர்வுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் இணக்கம் தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் ஆய்வு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# எதிர்வரும் சில வாரங்களில் மரக்கறிகளின்விலை குறையும்

## -கூறுகின்றார் விவசாய அமைச்சர்-



(கொழும்பு)

எதிர்வரும் சில வாரங்களில் மரக்கறியின் விலையில் வீழ்ச்சி ஏற்படும் என விவசாயத்துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.


அரசாங்கம் விவசாயத் துறையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட துரித நடவடிக்கைகள் காரணமாகவே இது சாத்தியமாகியதாக அவர் தெரிவித்தார்.

மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்நோக்காத விதத்தில் அரசாங்கம் செயற்படுகின்றது.

தற்போது அர்சி உற்பத்தியில் நாடு தன்னிரைவு கண்டுள்ளது ஒரு கிலோ அரிசியை 40 ரூபா என்ற சில்லறை விலையில் பெற்றுக்கொள்ள முடியும் இதற்கு அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் நாம் பயிரிடுவோம் நாட்டை மேம்படுத்துவோம் என்ற திட்டதின் மூலமே இந்த நிலை சாத்தியமாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# வடக்கு மக்களின் தேர்தல் தீர்ப்பை அரசாங்கம் சிரம் தாழ்த்தி ஏற்றுக்கொள்கிறது

## தெரிவிக்கின்றார் அமைச்சர் பசில்



(கொழும்பு)

**வடக்கு மக்கள் இம்முறை உள்ளூராட்சிச் சபை தேர்தலில் வழங்கிய தீர்ப்பை அரசாங்கம் சிரம் தாழ்த்தி, அமைதியுடன் ஏற்றுக் கொள்வதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக அமைச்சர் கருத்தை வெளியிட்ட போதே இவ்வாறு கூறினார் இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

நாடளாவிய ரீதியில் உள்ள பெரும்பான்மை பலத்துடன் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத் துக்கு அனுமதி வழங்கியுள்ளனர். ஜனாதிபதியின் தலைமையில் செயற்படுத்தப்படும் 'திவிநெகும', 'கமநெகும', 'மஹநெகும' ஆகிய கிராமப்புற உட்கட்டமைப்பு, கல்வி அபிவிருத்தி ஆகியவற்றை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக அரசாங்க ஊழியர்களில் பெரும்பாலானோர் அரசாங்கத்துடன் இருப்பது எமக்கு பெரும் தைரியத்தை கொடுத்துள்ளது.

அனுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் விவசாய மக்கள் உள்ளிட்ட பெரும்பாலானோர் வெற்றிலைக்கு வாக்களித்து எமது கொள்கைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

வடக்கில் உள்ள மக்களின் தீர்ப்பை நாம் சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொள்கிறோம். எனினும் இன, மத, குல பேதம் இன்றி வடக்கை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி தலைமையில் நாம் எடுத்துள்ள தீர்மானம் செயற்படுத்தப்பட்டு வரும் நிலையில் ஒரு சிலர் அந்த செயற்பாடுகளை கைவிட முனைந்திருப்பது கவலையளிக்கிறது.

வடக்கில் மக்களை தமது பக்கம் ஈர்ப்பதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இனவாத ரீதியில் பிரசாரம் செய்துள்ளமை கவலைக்குரியது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்

# விருப்பு வாக்குகளின் அடிப்படையில் சபைத் தலைவர்கள் நியமனம்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வெற்றிபெற்றுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தலைவர்களை நிய மிக்கவுள்ளதாக கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜ யந்த தெரிவித் தார்.

விசேட சந்தர்ப்பம் தவிர்ந்த வேறு எந்த விதமான காரணங்களின் அடிப்படையிலும் இந்த கொள்கையில் மாற்றம் ஏற்படப்போவதில்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பொதுவாக விருப்பு வாக்குகளின் அடிப்படையிலேயே கூட்டமைபப்பு சார்பான உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர்கள் நியமிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டமைப்பு சார்பாக உறுப்பினர்கள் பெற்ற விருப்பு வாக்கு விபரங்கள் உத்தியோகபூர்வமாக இன்னும் ஓரிரு தினங்களில் கிடைக்கவுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

அதன் பின்னர் தேர்தல் ஆணையாளரால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர்களின் பெயர் விபரங்கள் அனுப்பி வைகக்கப்படும் எனறும் தெரிவித்தார்.

# அரசியல் தீர்வின் அவசியத்தை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன

## எம்.கே சிவாஜிலிங்கம் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கை தமிழரசு கட்சியின் வெற்றியானது நாட்டின் இனப்பிரச்சினைக்கு உடனடியாக நிரந்தர அரசியல் தீர்வை காண வேண்டும் என்ற அவசியத்தை



வலியுறுத்தியுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில், கூட்டமைப்புக்கு பெருவாரியான மக்கள் ஆணை கிடைத்துள்ளது வடபகுதி தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் தேசிய பிரச்சினைக்கு தீர்வை கோரி நிற்கின்றனர்.

அரசியல் தீர்வை அரசாங்கம் துரிதமாக வழங்க வேண்டும் என்றார்.

# இவ்வருட இறுதிக்குள் மூன்றாம் கட்ட தேர்தல்

(கொழும்பு)

காலம் நீடிக்கப்பட்டுள்ள 23 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை இவ் வருட இறுதிக்குள் நடத்தவுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

தேர்தல் நடைபெறும் திகதி குறித்து தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்படுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இரண்டு கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டு 299 உறுப்பினர் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடததககது.

# மக்களின் மெய்யான விருப்பங்களை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தவில்லை

## இப்படிக் கூறுகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

மக்களின் மெய்யான விருப்பங்களை நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தவில்லை என ஜே.வி.பி கட்சி அறிவித்துள்ளது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தல் முடிவுகள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் சுயாதீனமானதும்,நீதியானதுமான முறையில் நடைபெற வில்லை என ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

கடுமையான முறையில் தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதுடன், அரச சொத்துக்கள் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் பாதுகாப்புப் படையினர் தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் எதிர்க்கட்சி வேட்பாளர்கள் பல்வேறு வழிகளில் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் வடக்கு தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு பாரியளவில் முயற்சி மேற்கொண்ட போதிலும், பிரதேச மக்கள் அதனை நிராகரித்துள்ளனர்.

என்ன காரணத்தினால் வடக்கில் அரசாங்கம் தோல்வியை சந்தித்தது என்பதனை ஆராய வேண்டும்.

மார்ச் 17 தேர்தல்களின் பின்னர் மக்கள் எதிர்நோக்கிய சுமைகளைப் போன்றே இந்தத் தேர்தலின் பின்னரும் சுமைகளை எதிர்நோக்க நேரிடும் இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் மக்களே தோல்வியடைந்துள்ளனர் என்றார்.

# போரை வெற்றிகொண்ட அரசாங்கம் சமாதானத்தை ஏற்படுத்த தவறிவிட்டது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் போரை வென்ற போதும் சமாதானத்தை வெற்றிகொள்வதில் தவறிவிட்டது. எனவே இலங்கையிலுள்ள சிறுபான்மையினருடனும் அவர்களது தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முன்னாள் நீதியரசர் கோபாலகிட்டனர் நினைவுச் சொற்பொழிவில் "பொருளாதார அபிவிருத்தியை உள்ளடக்கிய சமூகங்கள் மற்றும் சமாதானம்" என்ற தலைப்பில் பிரதான உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

பிரித்தானிய தொலைக்காட்சியில் இலங்கையின் கொலைக்களங்கள் எனும் ஆவணப்படத்தைப் பார்த்த 28 வயதான தனது மகன், தான் ஓர் இலங்கையர் எனவும் பௌத்தர் எனவும் கூறுவதற்கு வெட்கப்படுகின்றேன்.

28 வயதான எனது மகன் பிரித்தானிய தொலைக்காட்சியில் இந்த ஆவணப்படத்தைப் பார்த்தபின்னர் தான் ஓர் இலங்கையர் எனவும் பௌத்தர் எனவும் கூறுவதற்கு வெட்கப்படுவதாக எனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்த காலை வேளையை நான் எனது வாழ்நாள் முழுதும் மறக்கமாட்டேன். எனது மகளும் இதே போன்ற கருத்தைத் தெரிவித்தார். எமது நாட்டவர்கள் இத்தகைய பயங்கர நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என்பது குறித்து அவர் அதிர்ச்சியையும், அச்சத்தையும் வெளிப்படுத்தினார்.

எனது மகனும், மகளும் மற்றவர்களை கவனித்துக்கொள்கிறார்கள் என்பது குறித்து நான் பெருமையடைகிறேன். அவர்கள் தமது தந்தை, தாய் விரும்பிய படியான மனிதர்களாக வளர்ந்துள்ளார்கள் என்பது குறித்து நான் பெருமையடைகிறேன்.

ஒரு தேசம் என்ற வகையில் இலங்கையர்கள் தோல்வியடைந்துவிட்டோம் என்பதை ஏற்றுக்கொள்ளும் தன்னடக்கத்தை நாம் கொண்டிருப்போம். எமது தவறுகளை ஒப்புக்கொள்வதற்கான நேர்மையையும் திருத்தங்களை செய்வதற்கான பெருந்தன்மையையும் நாம் கொண்டிருப்போம். நிரூபிக்கப்பட்ட உண்மைகளையும், நேர்மையான விமர்சனங்களையும் தொடர்ச்சியாக நிராகரிப்பது எவரினதும் பிரச்சினையைத் தீர்க்காது. நல்லிணக்கம் மற்றும் புனரமைப்பை அடையும் உயரிய இலக்கிற்கு எமது தலைவர்கள் தலைமை தாங்க வேண்டும்.

இந்நாட்டின் பயங்கர வன்முறை மோதல்களுக்கு 1956 ஆம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டமே காரணம் ஆகும். தமிழ் இயக்கத்தின் மொழி சமத்துவத்துக்கான கோரிக்கை அரசினால் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டமை, சமஷ்டி கோரிக்கைக்கும் இறுதியாக தனிநாட்டு கோரிக்கைக்கும் இட்டுச் சென்றது.

1958, 1977, 1980, ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் 1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜுலை என்பன சமாதானத்திற்கு ஆதரவான தமிழ்ப் பொதுமக்களைக்கூட, சிங்கள ஆதிக்கமுள்ள நாட்டில் நீதியையும் சமவுரிமையையும் அடைய முடியாது என்று நம்பச் செய்தன.

சிறுபான்மையினரின் அரசியல், சமூக, பொருளாதார துறைகளில் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 1972, 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புகள் தவறின.

யுத்தத்தில் அரசாங்கம் வெற்றி கொண்டமை குறித்து நானும் மிக மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நாம் யுத்தத்தில் வென்றாலும் சமாதானத்திற்கான யுத்தத்தில் இன்னும் வெற்றிபெற ஆரம்பிக்கக்கூட இல்லை என்ற உண்மையைக் குறித்து நான் கண்மூடியிருக்க முடியாது.

சமாதானத்தை வெல்வதற்கு ஏனையோரை அபிவிருத்தியில் மாத்திரமல்லாமல், அதிகாரப் பரவலாக்கத்துக்கான அரசாங்கத்தின் செயன்முறைகளில் முழுமையான, சமத்துவப் பங்காளர்களாக முழுமையாகவும், நேர்மையாகவும் உள்ளடக்க வேண்டும்.

நீண்டகாலமாக தீர்க்கப்படாத தமிழர் பிரச்சினையின் விளைவான விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து தமிழ் சிவில் சமூகம் வேறுபட்டது என்பதை, யுத்தத்தில் வெற்றி கொண்ட அரசாங்கமும், சிங்களச் சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்கள் ஏனையோரைப் போன்றே இலங்கையில் சமத்துவமான பிரஜைகளாக வாழும் அவாவைக் கொணடிருக்கின்றனர்.

அவர்கள் ஐக்கியமான அமைதியான இலங்கையில், சமத்துவமான உரிமைகளையும் வாய்ப்புகளையும் கொண்டவர்களாக, சிங்களவர்களுடன் எமது சகோதர, சகோதரிகளாக வாழ விரும்புகிறார்கள். இலங்கை பிரிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான சிறந்த செயன்முறையாக இருக்கும்.

அதேவேளை, மறுபுறம் சிங்களவர்களின் அச்சத்தை நியாயப்படுத்துவற்கு காரணங்கள் இருக்கின்றன என்பதை நான் கூறத் துணிகிறேன். இலங்கை மீது 14 நூற்றாண்டு காலத்தில் 52 தடவை தென்னிந்திய ஆட்சியாளர்கள் படையெடுத்துள்ளனர் என்பதை வரலாற்றுப் பதிவுகள் காட்டுகின்றன.

அவர்கள் சில தடவை வெற்றிகொண்டார்கள். சிங்கள மக்களின் பொதுவான அச்சத்திற்கு இது போதுமானதாக இருககலாம்.பலமான தேசிய அடையாளத்தை ஒன்றிணைத்து ஏற்படுத்துவதற்காக அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட்சியாளர்கள் பௌதத்தை அரச மதமாக பின்பற்றினர். அத்துடன் எதிரிக்கு எதிராகப போரிடுவதற்கு படைதிரட்டுவதற்கும் அதைப் பயன்படுத்தினர்.

நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு வழங்கப்பட்ட மாகாண சபை முறைமையை வடக்கு, கிழக்கிற்கு ஏன் வழங்க முடியாது? சிறுபான்மையினருடனும் அவர்களின் தலைவர்களுடனும் நாம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். எம்மிடமிருப்பதை பகிர்ந்துகொள்வதால் எமது பலம் குறைந்துவிடப்போவதில்லை. மாறாக அது பிரிந்திருக்கும் சமூகங்களை ஒன்றிணைக்கும். நாட்டின் தலைவராக இருந்த எனது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் நான் தனிப்பட்ட ரீதியில் சமஷ்டிக்கு அர்ப்பணிப்புடன் இருந்தேன் எனவும் அவர் கூறினார்.

# சவுதியில் துன்புறுத்தப்படும் மகளை மீட்டுத் தருமாறு பெற்றோர் கோரிக்கை

(கொழும்பு)

சவுதி அரேபியாவின் றியாத் நகரில் பணிப்பெண்ணாக 10 மாதங்களாக துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மட்டக்களப்பு கண்ணன்குடா பிள்ளையாரடியைச் சேர்ந்த பெ.இராஜேஸ்வரியை (தயா) எனும் பெண்ணை மீட்டுத் தருமாறு அவரின் பெற்றோர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



பெ.இராஜேஸ்வரியை (தயா) கடந்த 2010ஆம் ஆண்டு 9 ஆம் மாதம் 4ஆம் திகதி வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணியாற்றுவதற்காக சவுதி அரேபியாவுக்குச் சென்றார். தனக்கு 10 மாதங்களாக சம்பளம் எதுவும் வழங்கப்படாத நிலையில் வீட்டு எஜமானியால் தொடர்ந்து துன்புறுத்தல் இடம்பெறுவதாகவும் அடிப்பதாகவும் அயன் பெட்டியால் சுடப்படுவதாகவும் தெரிவித்துள்ளதாக அவரின் பெற்றோர் கூறியுள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தாயான இராஜேஸ்வரியின் கணவரான சி.ரவிச்சந்திரன் கொலை செய்யப்பட்டு மட்டக்களப்பு வாவியில் வீசப்பட்ட நிலையில் கடந்த 2006.01.15 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இரு பிள்ளைகளையும பராமரிக்க முடியாத நிலையில், தனது தாயிடம் இருபிள்ளைகளையும் ஒப்படைத்துவிட்டு அவர் சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாகப் பணியாற்றச் சென்றார் என அவரின் பெற்றோர் மேலும தெரிவிக்கின்றனர்.

## 12 இலங்கையர்கள் சவுதியில் நெருக்கடி

(கொழும்பு)

சவுதியில் தாம் பணியாற்றும் இடத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் காரணமாக 12 இலங்கையர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

குறித்த இலங்கை பணியாளர்கள் ரியாத்தில் அமைந்துள்ள சவூதி அரேபிய உயரதிகாரி ஒருவருக்குச் சொந்தமான ஆடம்பர வீடொன்றில் பணியாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமக்கு முறையான சம்பளம் வழங்கப்படவில்லை எனவும், நாளாந்தம் 17 மணித்தியாலங்கள் பணிபுரிய நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த பணியாளர்கள் தொடர்பில் சவூதியில் அமைந்துள்ள இலங்கை தூதரக அதிகாரி தெரிவிக்கையில், இது தொடர்பில் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

# ஐ.தே.கட்சியின் தொடர் வீழ்ச்சிக்கு கட்சித் தலைவரே பொறுப்பேற்க வேண்டும்

## ரோசி சேனநாயக்க எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து செல்வதாகவும், இதற்கு கட்சியின் தலைவர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்க வேண்டுமெனவும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுடன் ஒப்பீடு செய்யும் போது ஐக்கிய தேசியக் கட்சி இந்தத் தேர்தலில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மினுவங்கொடை மற்றும் திருகோணமலை போன்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய நிலைகளிலும் இந்தத் தடவை தோல்வி ஏற்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த தேர்தலில் கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகளின் சதவீதம் கட்சியின் பின்னடைவை விதந்துரைக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகவும் மக்களின் மத்தியில் அதிருப்தி நிலவி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், காத்திரமான எதிர்க்கட்சி என்ற ரீதியில் இந்த ஏதுக்களை ஐக்கிய தேசியக்கட்சி சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியுள்ளது.

இந்தத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டும் எனவும், இதனை உதாசீனம் செய்தால் எதிர்காலத்தில் பாதகமான விளைவுகள் ஏற்படுவதனைத் தடுக்க முடியாது என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



கட்சிக்குள் இன்னமும் உரிய முறையில் ஜனநாயகம் நிலைநாட்டப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த நடைபயணக் குழுவினருக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை புதன் கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளதுடன், இலங்கையின் விளையாட்டு வீரர்களான மஹேல ஜெயவர்த்தன, டில்சான், குமார் சங்கக்கார, அஞ்சலோ மத்தியூஸ், பிரபல குத்துச் சண்டை வீரர் மஞ்சு வன்னியராச்சி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

# தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## -கண்காணிப்பு அமைப்புக்கள் வலியுறுத்து-

(கொழும்பு)

**தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று தேர்தல்களை கண்காணிக்கும் அமைப்புகளான கபே மற்றும் பவ்ரல் அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.**

18வது அரசியல் அமைப்பு திருத்தத்தின் மூலம் வரையறுக்கப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணையாளரின் அதிகாரங்களை விஸ்தரிக்க வேண்டும்.

நடைபெற்று முடிந்த தேர்தலின்போது ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஒருசில அறிவுறுத்தல்கள் மற்றும் பணிப்புரைகள் உரிய வகையில் அமுல்படுத்தப்பட் வில்லை என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அரச ஊடகங்கள் தொடர்பில் முறையான பணிப்புரைகள் விடுக்கக்கூடிய அதிகாரங்கள் இருக்கவில்லை என்பதுடன் இடமாற்றங்கள் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் குறைந்தளவான சந்தர்ப்பமே இருந்ததாக அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்நிலையில் ஆணையாளரின் பணிப்புரைகளை மீறி அரச சொத்துக்கள் பாரியளவில் பயன்படுத்தப்பட்டதாக குற்றஞ் சுமத்தியுள்ள அவர், 18ஆம் அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணையாளருக்குள்ள அதிகாரங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு நிலையே காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். இதனைவிட கூடுதல் அதிகாரங்கள் உரித்தாகின்ற ஒரு அரசியல் அமைப்பு திருத்தத்தை நோக்கி நாடு பயணிக்க வேண்டுமென்பது இந்த தேர்தலின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை தேர்தல் ஆணையாளருக்கு கூடுதல் அதிகாரங்களை உரித்தாக்குகின்ற ஒரு அரசியல் அமைப்பு திருத்தத்தை நோக்கி நாடு பயணிக்க வேண்டுமென பெவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டிஆராச்சி தெரிவித்துள்ளார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆணையாளரால் விடுக்கப்பட்ட பணிப்புரை களை சம்பந்தப்பட்ட தரப்பினரோ அல்லது அரசியல் கட்சிகளோ எந்தளவிற்கு கவனம் செலுத்தின என்பது கேள்விக் குறியென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேவையான தீர்மானங்களை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு போதுமான அதி காரங்கள் இல்லலையெனவும் இது தொடர்பில் சுயாதீன தேர்தல் ஆணைக் குழு நியமிக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். சுதந்திரமான தேர்தல் குறித்து கவனம் செலுத்துவதாயின், அதற்குரிய அதிகாரங்களை தேர்தல் ஆணையாளருக்கு பெற்றுக் கொடுக்க வேண்டுமென அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# அமெரிக்கா விதிக்கும் நிதித்தடையால் 13 மில்லியன் டொலரை இழக்கும் இலங்கை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா நிதித்தடை விதிக்குமானால் 13 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை இழக்க நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு பதிலளிக்கத் தவறுதல், ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தத் தவறுதல் மற்றும் அவசரகாலச் சட்டம் போன்றவற்றை நீக்கத் தவறினால் இலங்கைக்கான அமெரிக்காவின் நிதி உதவிகளை தடை செய்வதற்கான தீர்மானமொன்றை அமெரிக்காவின் வெளிவிவகாரக்குழு கடந்த வியாழக்கிழமை எடுத்துள்ளது.

பிரித்தானிய தொலைக்காட்சியான சனல் 4 இல் ஒளிபரப்பிய ஆவணப்படத்தை அமெரிக்க காங்கிரஸ் அரங்கத்தில் திரையிடப்பட்டதன் பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் அமெரிக்க உதவி நிறுவனம் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதியில் இருந்து 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் வரையிலுமான நிதி ஆண்டுக்காக இலங்கைக்காக 6 பில்லியன் ரூபாய்களை அமெரிக்க அரசாங்கத்திடம் கோரியுள்ளது. நிதித்தடை காரணமாக அந்த நிதியும் இலங்கைக்கு கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுற்றுலாப் பயணிகளின் வசதிகருதி

# 6 விமான நிலையங்களை அபிவிருத்திசெய்ய விமானப் போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

சுற்றுலாத்துறையை இலாக்காகக் கொண்டு விமானப் போக்குவரத்து அமைச் சானது ஆறு விமானநிலையங்களை மேலும் அபிவிருத்தி செய்து உள்ளூர் விமானப் போக்குவரத்துக்களை விரிவுபடுத்தும் ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பிரயாணிகள் உள்நாட்டிற்குள் பிரயாணம் செய்வதற்கான விமானச்சீட்டுக்களைப் பெற்று அதன் மூலம் தாம் செல்ல விரும்பும் இடங்களுக்கு அருகிலுள்ள விமான நிலையங்களுக்குப் பயணிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானை, பலாலி, வீரவில, கேகாலை, ஹிங்குராங்கொட, அனுராதபுரம், களுத்துறை, அம்பாறை போன்ற சில உள்ளூர் விமான நிலையங்கள் இராணுவ நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

தற்போது பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பலாலி விமான நிலையமா னது விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படவுள்ளது.

கொழும்பின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள இரத்மலானை விமான நிலையம், காலிக்கு அருகிலுள்ள கேகாலை விமான நிலையம், அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள வீரவில விமான நிலையம் மற்றும் இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள அனுராதபுர விமான நிலையம் ஆகியன அபிவிருத்தி செய்யப்படவுள்ள ஏனைய விமான நிலையங்கள் ஆகும்.

இதேவேளையில், அதிகரித்து வரும் சுற்றுலாத்துறையினரின் எண்ணிக்கை காரணமாக Air Taxi சேவைகளை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாக இலங்கையின் தேசிய விமான சேவையான எயார் லைன்ஸ் தெரிவித்துள்ளது.

பெந்தோட்டை, கேகாலை, நுவரெலியா, கண்டி, திகிவெல போன்ற இடங்களுக்கான வர்த்தகசார் விமான சேவைகளை வழங்கும் எயார்லைன்ஸ் பாசிகுடா மற்றும் அறுகம்குடா போன்ற வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள விமான நிலையங்களுக்கும் தனது வர்த்தக சேவையை விரிவுபடுத்தவுள்ளது.

# அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்தும் இந்தியாவிற்கு பயணிகள் கப்பல்சேவை

(கொழும்பு)

அம்பாந்தோட்டையிலுள்ள றுகுணு மகம்புர துறைமுகத்தைப் பயன்படுத்தி அதன் மூலம் இந்தியா - இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் பயணிகள் கப்பல்சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக அம்பாந்தோட்டையிலுள்ள இந்தியத் தூதுவர் ஆராயவுள்ளார்.

அம்பாந்தோட்டையில் வசிக்கும் மக்கள் இந்தியாவிற்குச் செல்வதற்காக மாதம் தோறும் கிட்டத்தட்ட 100 வரையிலான நுழைவிசைகளுக்கு விண்ணப்பிக்கின்றனர் என அம்பாந்தோட்டையில் உள்ள இந்தியத் தூதுவர் கே.என். மோகனகுமாரா தெரிவித்துள்ளார்.

இதனாலேயே இவ்வாறானதொரு புதிய கப்பற் சேவையை ஆரம்பிப்பது தொடர்பான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் 90 வீதமான நுழைவிசைகள் புனித தலயாத்திரிகளுக்கு வழங்கப்படுவதாகவும், இவ்வாறான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அவர்கள் காத்திருப்பதாகவும் மோகனகுமார மேலும் தெரிவித்துள்ளார்.

# இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கத்திட்டம்

(கொழும்பு)

இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகளை ஆராய்ந்து வருவதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் லலித் பியூம் குறிப்பிட்டார்.

இளையோர் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளும் நாட்களில் உறுப்பினர்களுக்கான உணவு, போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகளை வழங்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இளையோர் நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு கடந்த 16 ஆம் திகதி மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்றது. வழமையான நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைவாக மாதத்திற்கு ஒருமுறை இளையோர் நாடாளுமன்றம் கூடவுள்ளது. இந்த நாடாளுமன்றத்தில் 335 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதுடன் அவர்களுள் 332 உறுப்பினர்கள் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் இடம்பெற்ற தேர்தலின் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் ஆயுதக்குழுக்களின் செயற்பாட்டை முறியடிக்கும் இராணுவநடவடிக்கை வெற்றி

## என்கிறார் கட்டளைத் தளபதி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில்உள்ள ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை முறியடிக்கும் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் மிக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் கிழக்கில் இயங்கும் குறிப்பிட்ட ஒரு ஆயுதக் கும்பலுக்குச் சொந்தமான மூன்று ஆயுதங்கள் மட்டுமே கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கி ஒன்றில் இடம்பெற்ற ஆயுதமுனைக் கொள்ளைச் சம்பவத்தை அடுத்து கிழக்கில் செயற்படும் ஆயுதக்குழுக்களிடமுள்ள ஆயுதங்கள் களையப்படும் என கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி உறுதியளித்திருந்தார்.

ஆனால் கடந்த மூன்று வாரங்களாக இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகளில் மூன்ற ஆயதங்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயுதங்களைத் தேடிக் கைப்பற்றும் இராணுவத்தினரின் முயற்சியில் தாம் வெற்றி பெற்றுள்ளதாகவும், இது வரையில் தம்மால் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தின் கிழக்கு மாகாண கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பொனிபேஸ் பெரேரா லக்பிம செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளபோதிலும், கைப்பற்றப்பட்ட ஆயுத உபகரணங்கள் தொடர்பான எவ்வித தகவல்களையும் இவர் இதன் போது வழங்கவில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

படையினரால் மேற்கொள்ளப்பட்ட இத்தேடுதல் சம்பவமானது மிகவும் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. இதன் போது நாங்கள் சில ஆயுதங்களையும் இதனுடன் சம்பந்தப்பட்ட ஆயுதக் குழுவின் முக்கிய உறுப்பினர்களையும் கைதுசெய்துள்ளோம் என கிழக்கு மாகாணக் கட்டளை அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.



கடந்தகால யுத்தம் காரணமாக அழிவடைந்த கொக்கிளாய் அ.த.க.பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படுவதற்கு அத்திவாரம் வெட்டப்படுவதனைக் காணலாம். (17)

# மிகச் சிறிய குரங்கு

Pygmy Marmoset எனப்படும் விரல் குரங்கு, Pocket குரங்கு என்றும் அழைக்கப்படுகிறது. இந்தக் குரங்குகள் 14 முதல் 16 சென்டிமீற்றர் வரை வளரக்கூடியதாகும்.

ஆண் குரங்கின் எடை 140 கிராம் மற்றும் பெண் குரங்கு 120 கிராம் எடை கொண்டதாகும். உலகின் மிகச்சிறிய இந்த குரங்கு இனம் 14 முதல் 20 ஆண்டுகள் வரை வாளக்கூடியதாகும்.





# குழந்தையாக வாழும் அழகி

அமெரிக்காவைச் சேர்ந்த 25 வயது யுவதிதான் Riley. அழகானவரும்கூட. ஆனால் இவரது நடத்தைகளும் நடவடிக்கைகளும் ஒரு குழந்தைக்கு உரியனவாக இருந்து வருகின்றன. குழந்தைகளுக்கு உரிய உடுப்புக்களை அணிகின்றார். குழந்தைகளுக்கு உரிய உடுப்புக்களை அணிந்து கொள்கின்றமைக்காக நாளாந்தம் 12 மணித்தியாலங்களை செலவிடுகின்றார்.

அதாவது வருடத்தில் 4000 மணித்தியாலங்களை செலவிடுகின்றார். குழந்தைப் பிள்ளைகளுக்கு உரிய விளையாட்டுப் பொருட்களைப் பயன்படுத்துகின்றார். பொம்மைகளின் மீது அலாதிப் பிரியம். தொட்டிலில்தான் படுத்து உறங்குகின்றார். சூப்பியை பயன்படுத்துகின்றார். இப்படி எத்தனையோ விசித்திரமான நடத்தைகள்.



# ஆபத்தான விமான நிலையம்




கரீபியன் என்ற தீவில் உள்ள Princess Juliana என்ற சர்வதேச விமான நிலையம் செயின்ட் மார்டின் கடற்கரைப்பகுதியில் அமைந்துள்ளது.

இந்த விமான நிலையத்தின் ஓடு பாதை கடற்கரையில் தொடங்குகிறது. கடற்கரைப் பகுதியில் கீழ் இறங்கி வரும் விமானம் பார்ப்பதற்கு மிகவும் ஆபத்தானதாக உள்ளது.



# உடல் எடையைக் குறைக்க கரும்பு



பருமனான உடலை குறைக்க ஆண்களும், பெண்களும் பல்வேறு வழிமுறைகளை கடைப் பிடிக்கின்றனர். நடை பயிற்சி, கடுமையான உடற்பயிற்சியை மேற்கொள் கின்றனர். விளம்பரங்களை நம்பி மாத்திரை, லேகியம் போன்றவற்றையும் வாங்கிச் சாப்பிட்டு எப்படியாவது உடல் எடையை குறைகக முயற்சிக் கின்றனர். இப்போது சிரமமே இல்லாத செலவே பிடிக்காத வழிமுறையை கண்டுபிடித்து மருத்துவ வல்லுனர்கள் வெளியிட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியாவின் மெல போர்னில் உள்ள உணவு உயிர் தொழில்நுட்ப வல்லுனர் ஆங்குர் தேசாய் மற்றும் லா ட்ரோப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் இணைந்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளதாவது:

பருமனான உடலை இளைக்கச்செய்வதில் கரும்பு முக்கிய பங்கு வகிக்கிறது. கருப்பஞ்சாற்றில் உள்ள ரசாயனங்கள் உடலில் சேர்ந்துள்ள தேவையற்ற கொழுப்பை கரையச்செய்கிறது. இதன் மூலம் உடல் எடை குறைகிறது. எடை குறைவதால் ஏற்படும் உடல் சோர்வையும் கரும்புச் சாறு தடுக்கிறது. இரத்த அழுத்தத்தையும் இது கட்டுப்படுத்துகிறது. உடலில் சக்தியையும் அதிகரிக்கச்செய்கிறது.

பயன்படுத்த தொடங்கிய 12 வாரங்களில் இதன் பலன் வெளிப்படையாகத் தெரியவரும். பக்க விளைவுகள் எதையும் ஏற்படுத்தாமல் உடல் எடையை குறைக்க கரும்பு பயன்படுகிறது.

# ஹொலிவூட் தரத்தில் வீடியோ...




வீடியோ எடிட்டிங் செய்யும் வாசகர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. நாம் வீடியோவை எடிட்டிங் செய்து ஹொலிவுட் தரத்தில் காட்ட ஒரு இலவச மென்பொருள் வந்துள்ளது. அதைப் பற்றித்தான் இந்தப்பதிவு. வீடியோ எடிட்டிங் செய்ய பல மென்பொருட்கள் வந்தாலும்கூட சில மென பொருட்கள் நம்மை அறியாமலே ஈர்த்துச் சென்று விடும் அந்த வகையில் இன்று நாம் பார் இருக்கும் வீடியோ எ இலவச மென்பொ படுத்துவதற்கு ம

கொடுக் கும் சேவையி லும் நமக்கு பிரமிப்பை ஏற்படுத்துகிறது.

மென்பொருள் தரவிறக்க முகவரி : http://www.lightworksbeta.co

இத்தளத்துக்கு சென்று Download now என்கிற பொத்தா மென்பொருளை இலவசமாக தரவிறக்கலாம். ஏனைய வீடியோ பத்து மடங்கு சேவையை நாம் இந்த மென்பொருள் மூலம் விட்டால் நம்மை தொடர்ந்து ஈர்க்கிறது. வீடியோ எடிட்டிங் கூட எப்படி வீடியோ எடிட்டிங் செய்யலாம்? என்பதை எடிட்டிங் செய்ய விரும்பும் அனைவருக்கும் இப்பதி

# கூகிளி... அழகிய எழுத்துக்களை தரவிறக்க

இணைய ...த்தில் எந்த பக்கம் திரும் ஏதாவது ஒ ...ரு வகையில் கூகுளின் சேவ பயனளிக்கி ...றது எழுத்துரு என்பது மிகவும் மு ...க்கியமான ஒன்று. அதன் நம்முடைய ... கணணியில் தகவல்கள மற்றும் போ... போட்டோஷாப் போன்ற வடிவமை... ...புச் செய்ய பல வகை இருந்தா... ...ல் தான் நன்றாக கூகுள் 1... 99 புதுவகையான வழங்கு... கிறது. ... ...ந்த எழு கணணி... ...யில் ... தரவிறக்க கூகுள் ... இணைய எ தனிச்... தளத்தை சி...


...றது. இந்த தள Fonts கி ...க்க அழகிய ...டிட்டிங் உங் ...ள் பயன ...டும்ல்ல அள்ளி

...யவ தரவிறக்

...சொடுக்கி இந்த ... மென்பொ...

# கடல் முற்றுகைப் போராட்டத்தில் 25 ஆயிரம் பேர் பங்கேற்கின்றனர்

## பாரதிய ஜனதா அறிவிப்பு



(சென்னை)

மீனவர்களை பாதுகாக்க வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் நடைபெறும், கடல் முற்றுகைப் போராட்டத்தில் 25 ஆயிரம் பேர் பங்கேற்கிறார்கள் இதில் நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ், அகில இந்தியத் தலைவர்கள் முரளிதரராவ், சதீஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று பா.ஜனதா கட்சி மாநிலத்தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இந்தியத் தமிழ் மீனவர்களைப் பாதுகாக்கத் தவறிய, மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசைக் கண்டித்தும், மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திக்கொண்டு இருக்கும் இலங்கை அரசைக் கண்டித்தும், மீனவர்களைப் பாதுகாக்கக் கோரியும், தமிழக பா.ஜனதா கட்சி சார்பில் இராமேஸ்வரத்தில் அடுத்த மாதம் ஏழாம் திகதி கடல் முற்றுகை போராட்டம் நடக்கிறது. இந்தப் போராட்டத்தில் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த பா.ஜனதா கட்சியினர் 1,000 பேர் கலந்து கொள்கிறார்கள். இதே போல் மாநிலம் முழுவதும் இருந்து கடல் முற்றுகைப் போராட்டத்தில் 25 ஆயிரம் பேர் பங்கேற்கிறார்கள் என்றார்.

# 80 ஆயிரம் சிம் அட்டைகள் வைத்திருந்தவர் கைது

மும்பையில், 80 ஆயிரம், சிம் அட்டை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். இது குறித்து அவரிடம் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். மும்பையில், சமீபத்தில் நடந்த குண்டு வெடிப்பையடுத்து, கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில், பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், மும்பை புறநகர் பகுதியான தானேயில், பிவானி என்ற பகுதியில், அன்வர் அன்சாரி என்பவர் வீட்டில், பொலிஸார் சோதனை நடத்தினர். அப்போது, அவரது வீட்டில், 80 ஆயிரம் சிம் அட்டைகள் இருப்பதைக் கண்டறிந்தனர். அவற்றை பறிமுதல் செய்த பொலிஸார், அவரை கைது செய்தனர். இதுகுறித்து பொலிஸார் கருத்துத் தெரிவிக்கையில், கைது செய்யப்பட்டுள்ள நபர், சர்வதேச தொலைபேசி அழைப்புகள் தொடர்பான மோசடியில் ஈடுபட்டதாகத் தெரியவந்துள்ளது. அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம் என்றனர்.

# ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை விவகாரத்தில் எனது முடிவுகளில் தவறு எதுவுமில்லை

## நீதிமன்றில் முன்னாள் அமைச்சர் ராசா வாதம்

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பான விசாரணையில் முன்னாள் அமைச்சர் ராசா தமக்காக, தாமே ஆஜராகி வாதாடினார். இந்த வாதத்தின்போது நான் எடுத்த முடிவு எதிலும் தவறு இல்லை. இது நானாக எடுத்த கொள்கை அல்ல என்றும் வாதிட்டார்.

ஸ்பெக்டரம் ஊழல் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள நீதிபதி ஓ.பி.சைனி தலைமையில் செயற்படும் சிறப்பு நீதிமன்றின் முன்பு ஆஜராகி நேற்று வாதாடினார். அவரது வாதத்தின்போது மிக உற்சாகமாகக் காணப்பட்டார்.

ஸ்பெக்ட்ரம் ஏலம் வி ாமல் எடுக்கும் முடிவு என்பது கடந்த ால தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின்போதே இருந்து வந்தது. இதனைத்தான் நானும் பின்பற்றினேன். இதில் நானாக எந்த முடிவும் எடுக்கவில்லை, கொள்கையையும் மாற்றவில்லை. ஆனால் இந்தக் கொள்கை பின்பற்றியது தவறு என்றால் 1993 முதல் தொலைத்தொடர்பு துறை அமைச்சராக இருந்த அனைவரும் என்னோடு சிறையில் அடைக்கப்பட வேண்டும்.

டி.பி. ரியாலிட்டி, யூனிடெக் நிறுவனத்திற்கு ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீடு சட்டரீதியாக நடந்திருக்கிறது. இது பிரதமருக்குத் தெரியும்படியே நடந்தது.

தவறு இருந்திருக்கும பட்சத்தில் பிரதமர் அதனை தடுத்திருக்கலாம், காபினட் கொடுத்த அறிவுரையின் பேரில ஒதுக்கப்பட இந்த விவகாரத்திற்கு நிதியமைச்சர் சிதம்பரமும் ஒப்புதல் கொடுத்துள்ளார். நான் குற்றமற்றவன் என்றார்.

# தேர்தலில் தி.மு.க.வின் தோல்வி பொறுப்பேற்கிறார் கருணாநிதி

(சென்னை)

தேர்தல் தோல்விக்கு நானே காரணம் என்று பொதுக்குழுக் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களைச் சந்தித்த தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது,

காங்கிரஸ் கூட்டணியுள்ளது உள்ளபடியே தொடரும். மத்திய அமைச்சரவையில் இரண்டு பதவிகள் வெற்றிமாக உளளன. அவை தி.மு.க.வுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றை நிரப்பும்படியும் பிரதமர் மன்மோகன் கேட்டுக்கொண்டார். ஆனால் அந்த வெற்றிடம் அப்படியே தான இருக்கும். அவற்றை நிரப்ப தி.மு.க. முனையாது ஆனாலும் கூட்டணி தொடரும்.

இது குறித்து, நானும், பொதுச்செயலர் அன்பழகனும், உறுப்பினர்களிடம் பேசி எடுத்த முடிவு. காங்கிரஸ் கூட்டணியில் அதிருப்தி எதுவும் இல்லை.



அதிருப்தி இருப்பதாக சிலர் கூட்டங்களில் பேசி வருகின்றனர். அவர்கள் குறித தும் பொதுக்குழு கூட்டத்தில் பேசப் பட்டது.

ஒட்டு மொத்த சி.பி.ஐ.யை நான் குறை கூறவில்லை. அதிலுள்ள அதிகாரிகள் சிலர், உள்நோக்கத்துடன் செயல்படுகிறார்கள் என்றுதான் குறிப்பிட்டிருந்தேன். தி.மு.க. தலைமையை மாற்றுவது என்பது எளிதல்ல. ஊடகங்களில் தான் தி.மு.க. தலைமை எப்போது மாறும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கின்றன. தி.மு.க. தலைமை, சட்டதிட்டத்தின்படி தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்படுகிறது. நினைத்தவுடன் இதனை மாற்ற முடியாது. கீழ்மட்ட பொறுப்பிலும் இப்போது எந்த மாற்றமும் இருக்காது.

தேர்தல் தோல்வி குறித்து காங்கிரஸ் மற்றும் பா.ம.க. மாறி மாறி கருத்து தெரிவித்து வருவதாகக் கேட்கின்றனர். தேர்தல் தோல்விக்கு நானே காரணம் என்று பொதுக்குழுவில் கூட தெரிவித்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

# கல்மாடிக்கு ஞாபக மறதி நோய் சிறைச்சாலை அதிகாரி தெரிவிப்பு



(புதுடில்லி)

கொர்மன்வெல்த் ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாள் தலைவர் சுரேஷ் கல்மாடிக்கு ஞாபகமறதி நோய் உள்ளதாக திகார் சிறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

டில்லியில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடந்த கொமன்வெல்த் போட்டியில், ஆயிரம் கோடி ரூபாய்க்கு அதிகமாக ஊழல் நடந்துள்ளது தெரியவந்தது.

இது குறித்து சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக கொமன்வெல்த் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இருந்த கல்மாடி கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் அவர் உடல் நலம் சரியில்லாததால், டில்லியில் உள்ள லோக்நாராயண் ஜெய்பிரகாஷ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

66 வயதான சுரேஷ் கல்மாடிக்கு ஞாபக மறதி நோய் ஆரம்ப கட்டத்தில் உள்ளதாக மருத்துவ மனை தெரிவித்ததாக, அவரது குடும்பத்தினர் சிறை அதிகாரிகளிடம் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்கொண்டு இது குறித்து மருத்துவமனையிடமிருந்து முறையான தகவல் வந்தால் தான் நடவடிக்கை எடுக்க முடியும் என, திகார் சிறை அதிகாரி ஆர்.என்.சர்மா தெரிவித்துள்ளார். கல்மாடியின் வழக்கறிஞர் ஹித்தேஷ் ஜெயின் குறிப்பிடுகையில், கல்மாடி கடந்த ஐந்து ஆண்டுகளாகவே இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயத்தை நாங்கள் சிறை நிர்வாகத்திடமும், சி.பி.ஐ.யிடமும் தெரிவித்துள்ளோம் என்றார்.

இதற்கிடையே கல்மாடி லோக்சபா கூட்டத்தில் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ளார்.



புதுச்சேரியில் மாணவர்களுக்கு விமானம் செலுத்தும் பயிற்சி வழங்கப்படுகின்றது.

இதில் மாணவர் ஒருவருக்குப் பயிற்சி வழங்கப்படுவதைக் காணலாம்.

# யானைகளுடன்...

(14ஆம் பக்கத்தொடர்ச்சி)

பாக்கி, யானைகளை அறிந்தவன் என்கிற நம்பிக்கை எல்லாம் சேர்ந்து ஒரு மனத்தடையை ஏற்படுத்தி சந்தேகத்தின் பலனை அந்த யானைக்கு அளிக்க முடியாதவராக்கி, நும்ஜானெ என்கிற அப்பாவி யானையின் உயிரை பலிவாங்கியிருக்கிறது.

துலாதுலாவின் யானைகள் குருகுல ஆசான்களாய் இருந்து தன் இயல்பான வாழ்க்கை மூலம் பல விஷயங்களைக் லோரன்ஸுக்கு கற்றுக்கொடுத்துக்கொண்டே இருக்கின்றன. குடும்பம், தன்னலமின்மை, தலைமைக்குணம், பணிவு, வாழ்வின் மீதான நம்பிக்கை, தைரியம், அப்பழுக்கற்ற அன்பு, தடையற்ற வீரம், காருண்யம், உறுதி, மன்னிக்கும் குணம், கம்பீரம், விவேகம் என்று ஒவ்வொரு யானையும் தன் ஒவ்வொரு அசைவிலும் தன் ஆளுமையின அதிசயத்தை மனிதனுக்கு எடுத்துக் காட்டிக்கொண்டே இருக்கின்றது. நும்ஜானெ கூட தன் இறப்பின் மூலம் லோரன்ஸின் மனத்தடையை அவருக்கு வெளிச்சம் போட்டுக்காட்டி விட்டுத்தான் போயிருக்கிறது.

நாமே எழுப்பிக்கொள்ளும் மனத் தடைகள் தவிர, மனிதனுக்கும் யானைக்கும் இடையேயான தொடர்புக்கு உணமையில் எந்தத் தடையுமே இல்லை என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டதாக நெகிழ்வுடன் இறுதியில் குறிப்பிடுகிறார.

## பிரான்சின் "புர்கா" தடையால் சுற்றுலாப் பயணிகள் வரவு வீழ்ச்சி

உலகச் செய்திகள்

பிரான்சில் பொது இடங்களில் பெண்கள் முகத்தை மறைக்கும் புர்கா ஆடைகளை அணியக்கூடாது என்ற சட்டம் தற்போது அமுலில் உள்ளதால் மத்திய கிழக்கைச்சேர்ந்த முஸ்லிம் சுற்றுலாபயணிகள் பிரான்ஸ் செல்வதை தவிர்த்து வருகின்றனர். முஸ்லிம் பெண்கள் பாரம்பரியப்படி வெளியில் செல்லும் போது முகத்தை மறைத்து செல்வது நடைமுறையாகும். பிரான்ஸ் இந்த செயற்பாட்டுக்கு தடைவிதித்து உள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக முகத்தை பொது இடங்களில் மூடி செல்லக்கூடாது என பிரான்ஸ் அரசு கூறி கடும் சட்டத்தையும் கொண்டு வந்துள்ளது. இந்த சட்டம் பிரான்சில் வசிப்பவர்களுக்கு மட்டும் அல்லாமல் மத்திய கிழக்கு போன்ற முஸ்லிம் நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளும் முகத்தை மூடும் ஆடைகளை அணியக் கூடாது என பிராண்ஸ எச்சரித்து உள்ளது.

பிரான்சின் இந்த கட்டுப்பாடு கடுமையான முஸ்லிம் நடைமுறைகளை கடை பிடிக்கும் இஸ்லாமிய நாடுகளை எரிச்சல் அடையக்செய்து உள்ளன. இந்த நிலையில் தங்கள் மத கோட்பாடுகளுக்கு விரோதமாக வெளி இடங்களில் முகத்தை மூடும் ஆடை இல்லாமல் செல்ல இஸ்லாமிய பெண்கள் விரும்பவில்லை.

இதனால் மத்திய கிழக்கை சேர்ந்த முஸ்லிம் சுற்றுலா பயணிகள் பிரான்ஸ் செல்வதை தவிர்த்து வருகிறார்கள். அவர்கள் பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு அதிக அளவில் சுற்றுலா விடுமுறைக்கு செல்கிறார்கள்.

## லிபியாவில் தேசிய மாற்றசபைக்கு ஜேர்மன் 10கோடி யூரோ கடனுதவி

(பேர்லின்)

லிபியாவில் கடாபிக்கு எதிராக போராடும் தேசிய மாற்ற சபை அமைப்புக்கு ஜேர்மனி 10 கோடி யூரோ கடன் உதவியை அளிக்கிறது. லிபியாவில் கடந்த பெப்பிரவரி மாதம் முதல் கடாபிக்கு எதிராக போராட்டம் நடந்து வருகிறது. இந்த போராட்டத்தில் மக்களை லிபியா ராணுவம் கொன்று வருவதால் நேட்டோ படைகள் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக செயல்படுகிறது.

இந்த நிலையில் போராட்டக்காரர்களின் தேசிய மாற்ற சபைக்கு ஜேர்மனி 10 . கோடி யூரோ கடன் உதவியை அளிக்கிறது. இந்த கடன் உதவி பொது மக்கள் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் அளிக்கப்படுவதாக ஜேர்மனி தெரிவித்து உள்ளது. இந்த கடன் உதவி குறித்து ஜேர்மனி வெளியுறவுத்துறை அமைச்சர் குய்டோ வெஸ்டர்வெலே கூறியதாவது. கடாபி சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகவே போர் நடத்துகிறார். லிபியாவில் நிலைமை மோசமாக இருக்கிறது. அத்தியாவசிய பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் ஆகியவையும் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. இதனால் பொது மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். குறிப்பாக கிழக்குலிபியாவில் மக்கள் மிகுந்த துயரத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள் என்றார்.


## பிரிட்டனிலுள்ள தீவிரவாதிகளுக்கு நோர்வேத் தாக்குதலுடன் தொடர்பாம்

(ஒஸ்லோ)

நோர்வேயில் 93பேர் பலியாக காரணமாகிய தாக்குதலை நடத்திய இளைஞர்களுக்கும் பிரிட்டன தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீவிரவாத வெறித் தாக்குதலில் ஈடுபட்ட இளைஞர் ஆண்டர்சுக்கு பிரிட்டன் தீவிரவாதிகளுடன் தொடர்பு இருப்பது தற்போது தெரியவந்துள்ளது. கடந்த 2002ஆம் ஆண்டில் பிரிட்டனில் தீவிரவாதிகள் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் ஆண்டர்ஸ் மற்றும் இதர 7 நபர்கள் கலந்து கொண்டுள்ளனர். இது தொடர்பாக ஸ்கொட்லாந்து பொலிசார் நோர்வே நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு வருகிறார்கள்.

நோர்வே தாக்குதலில் இறந்தவர்களின் குடும்பத்தினரை நோர்வே மன்னர் ஹரால்டு, ராணி சோன்ஜா மற்றும் நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்டோல்டென்பர்க் ஆகியோர் சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.நோர்வே ஆலயங்களில் இறந்தவர்களுக்கு சிறப்பு பிரார்த்தனைகள் நடந்தன. ஆலயங்களில் மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டன. நோர்வே அரசு கட்டடங்களில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு உள்ளன. ஒஸ்லோவில் மிருகத்தனமாக தாக்குதல் நடத்திய ஆண்டர்ஸ் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



நோர்வேயில் இடம்பெற்ற தாக்குதலில் பலியானவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் முகமாக இடம்பெற்ற கூட்டத்தில் அந்நாட்டுப் பிரதமர் உரையாற்றுகின்றார்.

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பைசலாபாத் நகரில் உள்ள தனியார் விடுதியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆடை அலங்கார நிகழ்ச்சியில் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. குண்டு வெடிப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன் இஸ்லாமி ஜாமியாத் தலாபா மற்றும் ஜமாத்-இ-இஸ்லாமி மதவாத அமைப்பினர் சிலர் சேனாப் கிளப் சவுக் பகுதியில் இந்நிகழ்ச்சியை நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவ்வாறு செய்யாவிட்டால் விடுதியை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தப்படும் எனவும் அவர்கள் கோஷமிட்டனர். எனினும் பொலிசாரும், மாவட்ட நிர்வாகத்தினரும் பேச்சு நடத்தியதன்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

அதன்பின் குறிப்பிட்ட நேரத்தில் ஆடை அலங்கார நிகழ்ச்சி நடந்த போது திடீரென அந்த விடுதியில் குண்டு வெடித்தது. இதையடுத்து நிகழ்ச்சியானது குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே முடிவுக்கு வந்தது. இதனிடையே பாகிஸ்தானின் தெற்கு வசீரிஸ்தான் பகுதியில் ராணுவத்தினர் மீது பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் ஒருவர் பலியானார். ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

## பதிவிறக்கப் பெட்டகம்

விஜய் டிவியிலிருந்து சாமக்கிரியைகளுடன் வந்து இறங்கினார்கள். "எங்களது "காஃபி வித் அனு" – ஆட்டோகிராப் நிகழ்ச்சிக்காக உங்களுக்கு மதன் ஒரு பரிசு அனுப்பியிருக்கிறார்" என்றனர். அது ஒரு நடுத்தர சைசஸ் மரப்பெட்டி. "இதை நீங்கள் திறந்து பார்ப்பதை படம் பிடிக்க வேண்டும்" என்றார்கள். வெளிச்சம் போட்டார்கள். சட்டைக்குள் மைக் வைத்து, ஒன் டூ த்ரீ சொல்லச் சொன்னார்கள்.

"ரெடி சார்! நீங்க என்ன பண்றீங்க? யார்கிட்டருந்து வந்திருக்குன்னு கன்னத்தில கைவெச்சு அல்லது விட்டத்தைப் பார்த்து முதல்ல யோசியுங்க. 1992ன்னு போட்டிருக்கு. அதுக்கு என்ன அர்த்தம்னு சொல்லிக்கிட்டே யோசிங்க. அப்புறம் பெட்டியைத் திறங்க. உள்ள புத்தகங்களைப் பாருங்க. அதுக்குள்ள ஒரு கார்ட்டூன் இருக்கும். அதைப் பார்த்த உடனே, "ஆஹா இதை நம்ம மதன் அனுப்பிச்சிருககாரு. இப்ப புரியுது"ன்னு கையை சொடக்குங்க. 1992லதான் நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து "ஏன் எதற்கு எப்படி" துவங்கினோம்னு சொல்லுங்க. அப்புறம் மதன் பத்தி ரெண்டு மூணு நிமிஷம் பேசுங்க. ரெடியா சார்?"

தொலைக்காட்சிக்காக எத்தனை பாசாங்குகளை கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது என்பதை எண்ணும்போது வியப்பாக இருக்கிறது. தொலைக்காட்சியின் கவனவீச்சு – attention span பற்றி பல ஆராய்ச்சிகள் உண்டு. அவர்களுக்கு உலகத்திலேயே மிக விலை உயர்ந்த விஷயம் பார்வையாளர் கவனத்தைத் தக்க வைப்பதுதான். அதற்கான தந்திரங்களில் ஒன்றில் நான் ஏன் பங்கு கொள்ள வேண்டும். அந்த தந்திரம் இந்த வயசில் எனக்குத் தேவையில்லையே என்று நான் அந்த பதிவுக்கு மறுத்தேனா? இல்லை, அவர்கள் சொன்னபடியே செய்தேன். முதலில் கேள்விக்குறி, அப்புறம் பெட்டி திறப்பு, புத்தகப் புரட்டல், அப்புறம் மதன் என்று கண்டுபிடிப்பு எல்லாம் செய்தேன். காரணம், என் தின வாழ்விலேயே எத்தனையோ மற்ற பாசாங்குகள் உள்ளனவே. இன்று ஒரு கூடுதல் பாசாங்கு.

– சுஜாதா

நிகழ்ச்சி இடைவேளையின்போது நகுலனைச் சந்தித்துப் பேச முயன்றேன். அவருக்கு என்னைத் தெரியவில்லை. நினைவூட்டலகள் பயனளிக்கவில்லை. "மன்னிக்கணும், இப்பெல்லாம் ஞாபகமிருக்கறதில்லே, வயசாயிடுச்சோல்லியோ?" என்று உரக்கச் சிரித்தார். கிருஷ்ணசாமியுடன் வந்தது, என் கவிதைப் புத்தகம் கொடுக்க வந்தது, அந்த நேரத்தின் சில அடையாளங்கள் எல்லாவற்றையும் சொல்லிப் பார்த்தேன். இல்லை. அவர் நினைவில் நான் இல்லை. "நெறைய பேர் வர்றா, பாக்கறா, பேசறா. ஆனா யாரையும் ஞாபகம் வெச்சுக்க முடியல. கோணங்கி, விக்கிரமாதித்யன் நம்பின்னு அடிக்கடி வர்றவா ஞாபகம் இருக்கு. ஆமா, ஒங்க பேர் என்ன சொன்னேள், கிருஷ்ணசாமியா?"....

அதற்கு அடுத்த ஆண்டு [2001] நவம்பர் மாதம் அவரைச் சந்தித்தது மகிழ்ச்சியான தருணமாக இருந்தது. அவருடைய எண்பதாவது வயதுத் தொடக்கத்தைக் குறிப்பதற்காகவும் காவ்யா பதிப்பித்த "நகுலன் கவிதைகள்" வெளியீட்டை முன்வைத்தும் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி. அய்யப்ப பணிக்கர் தலைமை. அந்தத் தொகுப்பிலிருந்து அவருடைய கவிதைகளை வாசிக்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கொல்லிப்பாவை, மழை மரம் காற்று கவிதையின் ஒரு பகுதி ஆகியவற்றை வாசித்தேன்.

வாசிப்பு முடிந்ததும் நகுலன் சொன்னார்: "மலையாள வாடையே இல்லாமல் தமிழை அழகாக வாசிக்கிறீர்கள்."

"நான் தமிழ்க் கவிஞன். நீங்கள் கூட என் கவிதைகளை வாசித்திருக்கிறீர்கள். மூன்று புத்தகங்கள் வந்திருக்கின்றன."

"அப்படியா என்ன பெயரில் எழுதுகிறீர்கள்?"

"சொந்தப் பெயரில்தான். சுகுமாரன் என்ற பெயரில்தான்."

"அந்தப் பெயர் உங்களுக்குச் சொந்தம் என்று யார் சொன்னது?"

நான் விழித்துக் கொண்டிருந்தேன்.

– சுகுமாரன்

"ஐயா, ஒரு உயிரைப் பறிப்பதற்கு நமக்கு என்ன அதிகாரம்?"

"கொலை இல்லாம மனுச வரலாறு கிடையாது தம்பி. மத வரலாறு கிடையாது. கீதையிலே கிருஷ்ணன் சொல்லல்லியா, "கண்ணனே கொலை செய்கின்றான்"னு – ஆதிமனிசனுக்கு அடுத்த சந்ததியிலேருந்து இது ஆரம்பிச்சாச்சு எல்லாத் தர்ம பரிபாலனத்துக்கும் ஆதாரம் சுயநலம்தான் தம்பி. ஊரிலே நீ கேட்டிருப்பியே, "கொன்னாப் பாவம் தின்னாத் தீரும்னு" அது மாதிரிதான். உன் தேவைக்கு, உன் லாபத்துக்கு, உன் ஜெயத்துக்கு நீ கொன்னாப் பாவமில்லே நீ கொல்லாட்டா, எதிராளி உன்னை தீர்த்திருவான்னா என்ன செய்வே? அவரவர் நிலைமையிலே அவரவர் செய்றது நியாயம்பா"

"ஐயா இதெல்லாம் நமக்கு நாமே சொல்லக் கூடிய நொண்டிச் சமாதானம் இல்லையா?"

"எதுக்கும் பொது நியாயம்னு ஒண்ணும் கிடையாது தம்பி. ஆட்டிறைச்சி திங்கோம்ணா நமக்கு அது நியாயம். ஆட்டுக்கு அது அநியாயம்தானே! இதுலே பொது நியாயம் எது தம்பி? அதுலே இன்னும் ஒரு கசவாளித்தனம் பாத்துக்கோ. நாலு ஆட்டைக் கூட்டிட்டு வந்து ஒண்ணை வெட்டித் தொங்கப் போட்டு வித்துக்கிட்டிருப்பான். மத்த மூணும் பாத்துக்கிட்டே நிக்கும். அதுக்கு முகத்திலே எதாம் வருத்தத்தைப் பாத்திருக்கியா நீ? ஒரு புண்ணாக்கும் கிடையாது. அதேபோலத்தான். நாமோ ஒருத்தனுக்குக் குடலைச் சரிச்சாலும் ஒரு வருத்தமும் படாமல் பாத்துக்கிட்டே போவான் அதான் தம்பி உலகம்"

– நாஞ்சில் நாடன் [எட்டுத் திக்கும் மதயானை]

# யானைகளுடன் பேசுபவன்

அறிவிலும் நுண்ணுணர்விலும் பரிணாம அளவில் பலமடங்கு முன்னேறியதாய்க் கருதப்படும் திமிங்கலத்தையும், சிம்பன்ஸியையும் ஒத்ததாய் யானைகளின் அறிவுத்திறன் கருதப்படுகிறது. லோரன்ஸ் அந்தோனி என்பவர் எழுதியிருக்கும் "The Elephant Whisperer"- My Life with the Herd in the African Wild என்ற நூல் யானைகளின் அமானுஷ்ய சக்தி பற்றி அனுபவபூர்வமாக விளக்குகிறது. இந்தப் புத்தகத்தில் யானைகள் தவிர, வேட்டைக்காரர்களுடனான பூசல்கள், தென்னாபிரிக்க உள்ளரசியல் பிரச்சினைகள், துலாதுலா பிரதேசத்தில் வேட்டையாடுவது பரம்பரை உரிமை என வாதாடும் ஒரு பிரிவு, என பல பரிமாணங்களும் விளக்கப்பட்டுள்ளன.

தென் ஆபிரிக்காவின் ஜுலு பிரதேசத்தில் துலா துலா என்கிற ஒதுக்கீட்டு நிலத்தின் காப்பாளரான லோரன்ஸ அந்தோனி என்பவருக்கு 1999-இல் ஒருநாள் ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. "தப்பித்து ஓடிக்கொண்டிருக்கும் யானைக்கூட்டம் ஒன்றுக்கு துலாதுலாவில் இடம் கிடைக்குமா? துலாதுலாவில் அதுவரை யானைகள் கிடையாது. தப்பி ஓடும் யானைகள் வயல் வெளிகளையும் விளை நிலங்களையும் நாசம் செய்து விடும். எனவே ஒதுக்கீட்டு நிலத்தில் இருப்பு கொள்ளாமல் மீண்டும் மீண்டும் தப்பித்து ஓடிக்கொண்டிருக்கும் யானைகள் சுட்டுக்கொல்லப்பட்டு விடும். அப படிப்பட்ட யானைக்கூட்டம் ஒன்றைக் காப்பது குறித்த தொலைபேசி அழைப்புதான் அது.


துலாதுலாதான் அந்த யானைகளுக்கு உயிர்ப்பிச்சை தர கடைசி வழி. லோரன்ஸ் உடனே அவற்றை துலாதுலாவில் பாதுகாக்க ஒப்புக்கொள்கிறார். யானைகளுடனான லோரன்ஸின் நீண்ட உறவு அன்றைய தினத்தில் தொடங்குகிறது. உள்ளுணர்வை மட்டுமே உதவியாகக் கொண்டு அவர் துவங்கும் இந்தப் பயணம் யானைகளைக் குறித்த பல திறப்புகளை அவரிடத்தில் ஏற்படுத்துகிறது. இந்தப் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் யானைகளின் நுண்புலன் அவரை அதிசயிக்கச்செய்து கொண்டே இருக்கிறது. ஒரு கட்டத்தில் அந்த காட்டு யானைகளுடன் சுதந்திரமாய் உலவக்கூடியவராக, அவற்றின் உணர்வுடன் ஒன்றக்கூடியவராக, யானைகளுடன் பேசுபவராக அந்த அனுபவம் விரிகிறது.

பழக்கமாகும் வரை மின் வேலிக்குள் உள்ள பரந்த வெளியில் உலவ விடப்படும் ஒதுக்கீட்டு நிலத்தின் விலங்குகள் சில நாட்களில் பழகியதும் வெளியில் திறந்து விடப்படுகின்றன. துலாதுலாவிற்கு கொண்டு வரப்பட்ட யானைக் கூட்டத்திற்கு தலைமை



யாய் இருக்கும் தாய் யானையின் பெயர் 'நானா'. துலாதுலாவிற்கு வந்தவுடனேயே மின்சார வேலியை உடைத்துக்கொண்டு தன் கூட்டத்துடன் வெளியே ஓட முயற்சிக்கிறது நானா. அந்த சமயத்தில் லோரன்ஸ் அந்தோனி நானாவிடம் பேசத்தொடங்குகிறார். 'போகாதே' என்று மனப்பூர்வமாக ஆனால் சக மனிதனுடன் உரையாடுவது போல கெஞ்சுகிறார். 'வெளியே போனால் கொன்று விடுவார்கள்' என்று எச்சரிக்கிறார். 'இங்கே நீ உன் குடும்பத்துடன்' பாதுகாப்பாக வாழலாம்' என்று மீண்டும் மீண்டும் உரக்கச்சொல்கிறார். தான் பேசுவது புரியாவிட்டாலும், தன் அக்கறை உணர்வையும் உண்மையான கரிசனத்தையும் நானா புரிந்து கொரண்டுவிடும் என்று மனதார நம்புகிறார். அவ்வாறு பேசிக்கொண்டே இருக்கையில் ஒரு கட்டத்தில் அசையாமல் நின்று அவரைப் பல நிமிடங்கள் பார்க்கிறது நானா. பிறகு திரும்பி பாதுகாப்பு வேலிக்குள் போய் விடுகிறது.

தான் பேசுவது பலன் தருகிறது என்று லோரன்ஸ் ஒவ்வொரு நாளும் யானைக்கூட்டம் இருக்குமிடத்தைத் தேடிப்போய் நானாவிடம் 'உரையாடத்' தொடங்குகிறார். யானைக்கூட்டம் படிப்படியாக துலாதுலாவை ஒப்புக்கொண்டு சகஜமாக இருக் கத் தொடங்குகின்றன. ஒருநாள் நானா வேலி வழியாக தும்பிக்கையை லோரன்ஸை நோக்கி நீட்டுகிறது. அவரது உதவியாளர்கள் அதன் அருகில் போக வேண்டாமென எச்சரிக்கிறார்கள். அங்கிருந்து வந்துவிடும்படி வற்புறுத்துகிறார்கள். ஆனால் அது எதையுமே காதில் வாங்காமல் ஒருவித மயக்க நிலையில் இருப்பது போல் தெரிய நானாவின அருகே செல்கிறார் லோரன்ஸ். அதன் தும்பிக்கை அவர் தலையை வருடுகிறது. அந்த கணத்தில் ஆழ்ந்த மன அமைதியாகவும் நிம்மதியாகவும் உணர்கிறார். அந்த நேரத்தில் நானாவுக்கும் லோரன்ஸுக்கும், இடையேயான ஒரு ஆழமான பிணைப்பு - ஆழ் மனப் பிணைப்பு - உறுதியாகிறது. பிறகு அங்கிருந்து அந்த யானைக்கூட்டம் தப்பிச் செல்ல முயல்வதில்லை. ஆனால் யானைகளின் பல குண அதிசயங்கள் தொடர்ந்து லோரன்ஸுக்கு புலப்படத் தொடங்குகின்றன.



தொழில் நிமித்தம் அருகிலுள்ள டேர்பனுக்கு அடிக்கடி செல்லும் லோரன்ஸ் திரும்பி வருகையில் வீட்டின் முன், வரிசையாய் நானாவின் யானைக்கூட்டம் நின்று அவரை வரவேற்கின்றது. முதல் முறை இதை கவனிக்கையில் தற்செயல் என்று ஒதுக்கி விட்டாலும், ஒவ்வொரு முறையும் இதேபோல் நடப்பதைக் காண்கிறார். ஊரில் இல்லாத நாட்களில் அவை வீட்டிற்கு வருவதில்லை. எப்படி அந்த யானைக் கூட்டத்திற்கு அவர் ஊரில் இல்லாததும ஊர் திரும்பும் நேரமும் ஒவ்வொரு முறையும் தெரிந்து விடுகிறது?

உள்ளுணர்வு என்னும் சக்தி காட்டு விலங்குகளுக்கு அதிகக் கூர்மையாகச் செயல்பட வேண்டும். அதே கூர்மையுடனும் உள்ளுணர்வின் நுட்பத்துடனும் மனிதர்களும் இருக்கையில் விலங்குகளுடன் 'பேச' முடியும் என்கிறார் லோரன்ஸ். உதாரணமாக, யானைகள் கண்ணில் படாமல் புதர் மறைவில் முழுவதுமாய் மறைந்திருந்தாலும் கூட அருகில் எங்கோ அவை இருக்கின்றன என்று தன்னால் உணர முடிந்தது என்று குறிப்பிடுகிறார். இது காட்டு வாழ்க்கையில் மிக அவசியம், ஏனெனில் யானைக குட்டிகளுக்கு அருகே தற்செயலாக போய் விட்டால் கூட தாய் யானை பாய்ந்து வந்து தாக்கி கூழாக்கிவிடும்.

ஒருமுறை குட்டி யானைகளுக்கு சற்றருகில் அவரது ஜீப் சென்று விட, ஃப்ராங்கி எனும் பெண்யானை முழு வேகத்தில் அவரை நோக்கிப் பாய்ந்து தாக்க வருகிறது. தப்பியோட முடியாத நிலையில் ஜீப்பில் இருந்துகொண்டே "It's me" என்று கத்த மட்டுமே அவரால் முடிகிறது. மோதிக் கூழாக்கும் வேகத்தில் கண்மண் தெரியாமல் ஓடி வந்த ஃப்ராங்கி, ஜீப்பை முட்டப்போகும் நேரத்தில் திடீரென சங்கிலியால் இழுத்தது போல் சறுக்கி புழுதிவாரியிறைத்து லோரன்ஸின் முகத்துக்கு அருகே வந்து நிற்கிறது. பிறகு சில அடிகள் பின்வாங்கி, சிறிது நேரம் முறைத்து விட்டு திரும்பிப் போகிறது. இவை அத்தனையும் தாய் யானையும் தலைவியுமான நானா பார்த்துக்கொண்டிருக்கும்போதே நடக்கிறது. இதன் மூலம் ஃப்ராங்கிக்கும் தனக்கும் ஒரு புதிய பாடத்தை நானா கற்றுத்தந்ததாக லோரன்ஸ் முடிவு செய்கிறார். நானா இல்லாத நிலை ஏற்பட்டால், ஃப்ராங்கிக்கு லோரன்ஸின் மீது சுயமாக நம்பிக்கை ஏற்பட வேண்டும். அப்போதுதான் அந்த யானைக்கூட்டம் பாதுகாக்கப்பட முடியும். அந்த நிகழ்ச்சிககுப் பிறகு ஃப்ராங்கியும் நானா போலவே லோரன்ஸை நட்பாகப் பாவிக்கத் தொடங்குவதையும் கவனிக்கிறார்.

யானைகள் எப்படி ஒன்றோடொன்று தொடர்பு கொள்கிறதென்று முழுமையாய் அறிய முடியவில்லை, ஆனால் அவை தொலைதூரம் தொடர்பு கொள்ளும் சக்தி உடையவை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றே. கேட்டி பெய்ன என்னும் கார்னல் பல்கலைக்கழக விஞ்ஞானி 1984-இல் வயிற்றிலிருந்து உருவாக்கும் அகஒலி அலைகள் மூலம் யானைகள் தொடர்பு கொள்கின்றன என்று கண்டுபிடித்தது முக்கியமான ஒன்றாக இன்றுவரை கருதப்படுகிறது.

யானைகள் வயிற்றிலிருந்து உருவாக்கும் 'உறுமல்கள்' சில நாம் கேட்கக்கூடியவை, பல நம் செவிப்புலனுக்கு எட்டாத குறைந்த அலைநீளம் கொண்டவை. பெரும்பாலான உறுமல்கள் 5-30 ஹெர்ட்ஸ் அலை நீளம் உடையவை. குறைந்த அலைநீளம் கொண்ட ஒலியலைகள் சிதைவின்றி பல கிலோமீற்றர் தூரம் செல்லக்கூடியவை. 2 முதல் நான்கு கிலோமீற்றர் வரை யானைகளின் உறுமல்கள் போகக்கூடும் என்கிறார்கள்.

வெப்ப நிலைத் திருப்பம் (temperature inversion) ஏற்படும் மாலை மற்றும் இரவு நேரங்களில் இந்த ஒலியலைகள் இன்னும் பல மடங்கு தூரம் வலுவிழக்காமல் பயணிக்க முடியும். காற்றின் மேலடுக்கு கீழடுக்கை விட வெம்மையாக (எனவே அடர்வு குறைவாக) இருக்கையில், அக எதிரொலிப்பின் மூலம் குறை அலைநீள ஒலி அலைகள் வெகு தூரம் பயணிக்க முடிகிறது (உதாரணத்திற்கு பனிமூட்ட நாட்களில் உள்ளூர் எஃப் எம் ரேடியோ ஒலிபரப்பை பல நூறு அல்லது சிலசமயம் ஆயிரம் மைல் தாண்டிக்கூட கேட்க முடியும்). யானைகள் மிக அதிகமாக குறை அலைநீள ஒலிகளை ஏற்படுத்துவது இவ்வாறு வெப்பத்திருப்பம் நிகழக்கூடிய மாலை மற்றும் இரவு நேரங்களில்தான் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அறிவிலும் நுண்ணுணர்விலும் பரிணாம அளவில் பலமடங்கு முன்னேறியதாய்க் கருதப்படும் திமிங்கலத்தையும், சிம்பன்ஸியையும் ஒத்ததாய் யானைகளின் அறிவுத்திறன் கருதப்படுகிறது. தாழ்ப்பாள் நீக்குதல் போன்ற நுட்பமான விஷயத்தை யானைகள் விரைவிலேயே கற்றுக் கொண்டு விடுகின்றன. துலாதுலாவில் மின் வேலிகளுக்குப்பின் வைக்கப்பட்ட கலைமான் கூட்டம் ஒன்றை நானா வந்து தாழ் நீக்கி வெளியே போக விடுகிறது. (ஏன் இதை நானா செய்ய வேண்டும் என்று அதிசயிக்கிறார் லோரன்ஸ்).

யானைகள் அறிவார்ந்தவை. முக்கியமாக, விஷயங்களை நினைவில் சேமித்து பின் தேவையானபோது வெளிக்கொணர்ந்து முடிவெடுக்கக்கூடிய அளவுக்கு சிந்திக்கும் வல்லமை படைத்தவை. யானைகளின் இந்த தீர்க்கமான நினைவாற்றல் உணவிடங்களை கண்டு பிடிப்பதிலும், ஆபத்துகாலங்களில் தப்பித்து பாதுகாப்பான இடம் நோக்கி தன் கூட்டத்தை வழிநடத்திச்செல்லவும் அவற்றிற்கு பெரிதும் உதவுகின்றன. ஒருமுறை துலாதுலாவின் புல்வெளி வெப்பத்தில் தீப்பற்றி எரியத் தொடங்குகையில், லோரன்ஸ் பதைத்துப்போய் யானைக்கூட்டத்தைத் தேடிப் போகிறார். நானாவோ தன் கூட்டத்தை பத்திர மாக பல மைல்கள் தாண்டி இருக்கும் முதலைக்குளம் என்கிற நீர்நிலையின் நடுவில் கூட்டிக்கொண்டு வந்து நின்று கொண்டிருக்கிறது. முதலைகளோ வெப்பம் தாளாமல் நீர்நிலையின் தொலைப்பகுதிக்கு இடம் பெயர்ந்து விட்டிருக்கின்றன.

காட்டு யானைகள் பொதுவாக கூட்டம் கூட்டமாக வாழ்பவை. பருவ வயதடைந்த ஆண்யானை கூட்டத்திலிருந்து பிரிந்து தனியே போகிறது. துலாதுலாவின் நும்ஜானெ எனும் யானை அப்படிப்பட்டது. நானாவின் கூட்டத்தில் அதற்கு கடைசி இடம் தான். ஒரு கட்டத்தில் தனியாளாய்த் திரியத் தொடங்குகிறது. திடீரென்று நும்ஜானெ கிறுக்குத்தனமாக நடந்து கொள்ளத் தொடங்குகிறது. திடீர் திடீரென ரேஞ்சர்களைத் தாக்கும் விதத்தில் ஓடிவரத் தொடங்குகிறது. ஒரு கட்டத்தில் ரோந்து ஜீப்பை கடுமையாக தாக்குகிறது. அதனுள் இருப்பவர்கள் தெய்வாதீனமாக உயிருடன் தப்புகின்றனர். அடிபட்டு கீழேவிழுந்து கிடக்கும் லோரன்ஸை காலடியில் வைத்து துதிக்கையால் முகர்ந்து தடவிப் பார்த்து பின் விட்டு விடுகிறது. அதே நேரத்தில் நானாவின் மொத்த யானைக் கூட்டமும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்து நும்ஜானெவை அப்புறப்படுத்திக் கூட்டிச்செல்கின்றன. அந்த நிகழ்ச்சிக்குப்பிறகு யாருமற்ற சஃபாரி வேன் ஒன்று நும்ஜானெனால் சின்னாபின்னமாக்கப்படுகிறது. தூண்டுதல் ஏதுமில்லாமலேயே நிகழும் இவ்வகைத் தாக்குதல்கள் நும்ஜானெனுக்கு மதம் பிடித்து கட்டுக்கடங்காமல் போய் விட்டதாக லோரன்ஸை முடிவு செய்ய வைக்கிறது.

கட்டுக்கடங்காத யானையை சுட்டுக் கொல்வதே ஒரே தீர்வு என்று தெரிந்தும மீண்டும் மீண்டும் அதனைச் செயல்படுத்துவதைத் தள்ளிப்போடுகிறார் லோரன்ஸ். ஆனால் ஒரு கட்டத்தில் வேறு வழியின்றி கொன்று விடுவதுதான் ஒரே வழி என்று முடிவெடுக்கிறார். தன்னால் சுட முடியாத நிலையில், வேறு இரண்டு தேர்ந்த ரேஞ்சர்களை வரவழைத்து தான் பார்க்காத தூரத்தில் போய் நும்ஜானெனைக் சுட்டுக் கொல்லும்படி சொல்லி விடுகிறார். தனது ஒன்பது வருட நண்பனைக் கொல்வதற்கு தானே ஆணை பிறப்பிக்க நேர்ந்த துக்கத்தில் மூழ்கிப்போகிறார்.

சிறிது நாட்கள் கழித்து நும்ஜானெனின் இறந்த உடலிலிருந்த தந்தம் ஒன்றை ரேஞ்சர் ஒருவன் கொண்டு வந்து லோரன்ஸிடம் காட்டுகிறான். அதன் முனை மிகப்பெரிதாக பிளவுபட்டிருக்கிறது. அதன் வழியாக விரல்களை நுழைத்து ஆராயும் லோரன்ஸ் அந்த நீண்ட பல்லின் திசுக்கள் கிருமிகளால் தாக்கப்பட்டு ஆழமாக அழுகியிருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைகிறார். நமக்கு பல் வலி போலத்தான் யானைக்கு தந்தத்தின் வலியும். கிருமித் தாக்குதலின் வலி தாங்க முடியாமல் ஓடியும் கத்தியும் அது செய்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாவற்றையும் மதம் பிடித்தது என்று தப்புக் கணக்கு போட்டு அதனைக் கொன்று விட்ட கொடுமை அப்போது அவருக்கு மண்டையில் அடித்தது போல் புரிகிறது.

ஒரு மயக்க ஊசியில் சரி செய்திருக்க வேண்டிய ஒரு எளிய விஷயத்தை யானைகளுடன் பேசுபவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

யானைகளின் வாழ்விடம் மீதான தனது அதிகாரம், கையில் இருக்கும் துப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சுற்றுலாத்துறை வருமானம் உயர்வு

# இலங்கை மத்திய வங்கி அறிக்கை



(கொழும்பு)


இலங்கையின் சுற்றுலாத் துறை வருமானம் 2011 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 370 மில்லியனை அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இதே காலப் பகுதியில் 245 மில்லியன் அமெரிக்க டொலர்களே வருமானமாக காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் துரிதமாக வருமானத்தை அதிகரித்து வருவதில் சுற்றுலாத் துறை பெரும்பங்கு வகிக்கிறது எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் - சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 36.9 வீதமாக அதிகரித்துள்ளது. இவ்வருடம் முதல் ஆறு மாத காலப் பகுதியில் 381538 பேர் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வந்துள்ளனர். கடந்த வருடத்தில் முதல் ஆறு மாதகாலப் பகுதியில் 278652 சுற்றுலாப் பயணிகளே வருகை தந்தனர் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# புலம்பெயர்ந்த தேசத்தில்...

## அவுஸ்திரேலியாவில் மணிவிழாக் காணும் எழுத்தாளர் முருகபூபதி



இலங்கையில் நீர்கொழும்பில் 1951 ஆம் ஆண்டு பிறந்த முருகபூபதி படைப்பாளியாகவும், பத்திரிகையாளராகவும் இயங்கியவர். 1987 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த முருகபூபதி தனது எழுத்துப் பணிகளையும், சமூகப்பணிகளையும் அங்கு தொடர்ந்தார். இந்த ஆண்டு ஜுலை மாதம் அவரது மணிவிழா காலம். இதனை முன்னிட்டு அவுஸ்திரேலியாவில் அவர் அங்கம் வகிக்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் மற்றும் அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம் ஆகியன இணைந்து அவரது சேவைகளைப் பாராட்டும் முகமாக எதிர்வரும் 31.07. 2011 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு மெல்பனில் ஒன்றுகூடல் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளன. மல்கிறேவ் என்னும் இடத்தில் அமைந்துள்ள சமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலங்கையில் 1970 களில் மல்லிகை இதழ் ஊடாக இலக்கியவாதியாகவும் வீரகேசரியில் நீர்கொழும்பு நிருபராகப் பத்திரிகையாளராகவும் எழுத்துலகில் அறிமுகமான முருகபூபதி, இதுவரையில் 17 நூல்களை எழுதியிருப்பவர். சிறுகதைக்காகவும், நாவலுக்காகவும் இரு தடவை தேசிய சாகித்திய விருதுகளைப் பெற்றவர்.

அவுஸ்திரேலியாவிலும் இலக்கிய மற்றும் சமூகப் பணிகளுக்காகச் சில விருதுகளைப் பெற்றுள்ள முருகபூபதி, இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு உதவும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் என்ற புனர்வாழ்வு அமைப்பையும், அவுஸ்திரேலியாவில் வருடந்தோறும் நடைபெற்றுவரும் தமிழ் எழுத்தாளர் விழாவை ஒழுங்கு செய்யும் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தையும் ஸ்தாபித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க

# கிழக்கில் விசேட ஏற்பாடு

சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான மாநாடு மட்டக்களப்பு மாநகர சபையின் மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் அனுசரணையுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகாநாட்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் டி.சி.ஆனந்தராஜா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் செல்வி சுஜிதா சமரசேகர, ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ஆர்.மனோகரன், மட்டக்களப்பு புலனயர்வு அதிகாரி ஏ.சி.ஏ. அஸீஸ் உட்பட கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சிவில் குழுக்களின் பிரதி நிதிகள், ஆசிரியர்கள், கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், பொலிஸார் என பலரும் கலந்துகொண்டனர்.

சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் மனித உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் இம்காநாட்டில் கலந்துரையாடப்பட்டன.

எதிர் காலத்தில் கிழக்கில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# மகளிர் அபிவிருத்திச் சங்கம் பிரான்பற்றில் இன்று ஆரம்பம்

(ஆனைக்கோட்டை)

இலங்கை வங்கி மானிப்பாய் கிளையின் பிரான்பற்று மகாலட்சுமி மகளிர் அபிவிருத்திச் சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரான்பற்று முருகன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி இராமச்சந்திரன் தவமலர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாண பிராந்திய உதவியாளர் எஸ்.திருவாகரன் பிரதம விருந்தினராகவும் யாழ்.மத்திய வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.ஸ்ரீதரன், இலங்கை வங்கியின் குழுத்தலைவர் எஸ்.பத்மநாதன், கிராம சேவையாளர்கள் எஸ்.ஞான ஆனந்தன், தயானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் அறிமுகவுரையை இலங்கை வங்கியின் த.இலட்சுமண சர்மா வழங்கவுள்ளார்.(104)



பிரித்தானியாவில் தமிழ்க் கல்விக் கூடத்தின் ஓராம் ஆண்டு நிறைவுவிழா நிகழ்வின்போது...

# வேலணையில் வீதி புனரமைப்பு

(வேலணை)

உலக வங்கியின் கடனுதவியுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வடபகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக நிதியுதவி வழங்கி வருகிறது.

இந்த உலக வங்கியின் கடனுதவியில் வேலணை இராசையா வீதியின் புனரமைப்புக்கென தொன்னூற்றிரண்டு இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

மேற்படி இந்த நிதியில் இருந்து வேலணைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 2.6 கிலோ மீற்றர் நீளமான வேலணை இராசையா வீதியின் புனரமைப்புப் பணியின் ஆரம்ப வைபவத்தினை அண்மையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரான கமலேந்திரன் (கமல்) சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்துவைத்தார்.

இந்த நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் கௌரவ செயலாளர் கெ.தவராசா மற்றும் பிரதேச சபையின் அதிகாரிகள் பொது மக்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டிருந்தனர். (05)

## துறைமுகப் புனரமைப்பு...

அரசுகளுக்கிடையில் ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

இத்துறைமுக அபிவிருத்திக்காக இந்திய அரசு 2.2 பில்லியன் ரூபாவை செலவுசெய்யவுள்ளதாகவும், இதற்கான மதிப்பீட்டுப் பணிகள் ஏற்கனவே நிறைவுசெய்யப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் செயற்திட்டம் சுமார் இரண்டு வருடங்களில் பூர்த்தி செய்யப்படும் என்று காலவரையறை செய்யப்பட்டிருக்கிறது.

இப்பணிகள் பூரணப்படுத்தப்பட்டதும் வடக்கின் அபிவிருத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் பாரிய முன்னேற்றத்தை எட்ட வாய்ப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நெல்லியடியில்...

கூரிய ஆயுதங்களுடன் இக குழுக்கள் சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் திடீரென அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் மேற்படி இளைஞர்களைக் கைதுசெய்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்ப்படுத்தினர்.

இந்தத் தகராறின் போது ஒரு பகுதியினர் தப்பியோடி விட்டதாகவும் இவர்களைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

## உள்ளூராட்சி...

உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்தேர்தலில் கட்சிகள் பெற்றுக்கொண்ட உறுப்பினர்களின் விபரம் வருமாறு.

ஐ.ம.சு.மு. -512, த.தே.கூ. -183, ஐ.தே.க. -137, ஜே.வி.பி. -13, த.வி.கூ -12, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் -07, பிரஜைகள் முன்னணி -02, லங்கா சமசமாஜ கட்சி -01, சுயேட்சைக்குழு -08.

## செய்திப்பாணம்


**தமிழனுக்கு எதிரிகள் தரணியில் வேறில்லை**
**தமிழனாம் என்பதைத் தட்டேலாது - அமிலமாக**
**தன்வயிறு வளர்க்கத் தலைப்பட்டு பின்கதவால்**
**முன்னிலை வகித்தலே முடிபு!**



நகர சபை, யாழ்ப்பாணம்.



# நிராகரிக்கப்பட்ட வாக்குகள் அதிகம் வாக்களிப்பு முறை சரிவரப் புரியவில்லை



(யாழ்ப்பாணம்)

நடந்துமுடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பதற்காக அமுல்படுத்தப்பட்ட வாக்களிப்பு முறை பாமர மக்களுக்கு புரிந்து கொள்ள முடியாத விடயமாகக் காணப்பட்டிருக்கிறது. இதனால் இத்தேர்தலில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகரித்துக் காணப்பட்டதாக யாழ். செயலக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களின்போது யாழ். மாவட்டத்தில் 192,694 பேர் வாக்களித்துள்ளனர்.

இவற்றுள் 16,402 வாக்குகள் நிராகரிக்கப்பட்டதாகவும், 176,292 வாக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் திணைக்களம் தெரிவித்தது. 51.47 வீதமான மக்கள் வாக்களித்துள்ளனர்.

மேலும் இந்தத் தேர்தலை நேர்மையாக நடத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைத்ததாகவும், சர்வதேசத்திற்கும் இந்தத் தேர்தல் நீதியாக நடைபெற்றிருப்பது காட்டப்பட்டிருப்பதாகவும் தேர்தல் தினத்தன்று அரசியல் கட்சிகளினால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு உடனடியாகவே நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். ஒரு சில சிறு சம்பவங்களைத் தவிர பாரதூரமான சம்பவங்கள் நடைபெறவில்லை எனவும், இது அநேகமாக தேர்தல்களின் போது நடைபெறும் சம்பவங்கள் மட்டுமே எனவும் தெரிவித்தார். (பா)

# உலக வங்கியின் உதவித்திட்டம் வன்னி விவசாயிகளுக்கு வாய்ப்பு

(கிளிநொச்சி)

உலகவங்கியின் நிதி உதவியுடன் கனகராயன்குளத்தில் 200 ஏக்கர் காணியில் விதை உற்பத்திப் பண்ணை ஆரம்பிக்கப் படவுள்ளது. இதற்குரிய அனைத்து பணிகளும் நிறைவடைந்துள்ளது என வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சாள்ஸ் தெரிவித்தார்.

அதேநேரத்தில் நயினாமடுவில் 200 ஏக்கரில் உயர்தர கால்நடை உற்பத்தி நிலையம் அமைக்க தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கும் உலக வங்கி நிதி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக அரச அதிபர் மேலும் கூறினார்.

இரண்டு திட்டங்களும் நிறைவேறும் பட்சத்தில் பிரதேசத்தைச் சேர்ந்த பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சாத்தியங்கள் உள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

# மானிப்பாய் இந்து, சுன்னாகம் ஸ்கந்தா இரு மொழிமூலப் பாடசாலைகளாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் கல்வி வலயத்தில் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலப் பாடசாலைகளாக இரண்டு பாடசாலைகளை கல்வியமைச்சு பிரகடனம் செய்துள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி என்பன இருமொழி மூலக் கல்விப் பாடசாலைகளாக இயங்கவுள்ளன.

புதிய நடைமுறைக்கமைய இப்பாடசாலைகளில் தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்மொழி மூலமான கற்பித்தலுடன் ஆங்கிலமொழி மூலமான கற்பித்தலும் இடம்பெறவுள்ளது.

# தமிழ் மொழியில் பயிற்சி பொலிஸாருக்கு வழங்க ஏற்பாடு



(கொழும்பு)

திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் முதன்முறையாக தமிழ்மொழிக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது.

பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜேவர்தனவினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த கற்கைநெறியினை மேற்கொள்வதற்காக திருகோணமலை, கந்தளாய், கம்பளை, நுவரெலியா பிரதேசங்களில் கடமையாற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அமைச்சுப் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 94 பேர் தெரிவாகியுள்ளனர்.

மொழிப் பிரச்சினையைத் தீர்த்தல், தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் பிரதேசங்களில் கடமைகளில் ஈடுபடுதல் உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டே இந்த தமிழ்மொழிக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டதாக பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜேவர்தன தெரிவித்தார்.

# "அந்தாதி நாயகி" தொடர் சொற்பொழிவு




(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வாய்க்காற்தரவைப் பிள்ளையார் ஆலய மஹோற்சவ தினங்களில் கொடியேற்றம் முதலாக கொடியிறக்கம் வரையிலான நாட்களில் தினமும் இரவு 7.00 மணி முதல் 8.00 மணி வரையிலான காலத்தில் கலாபூஷணம், அருள்மொழியரசி, வித்துவான் ஸ்ரீமதி வசந்தா வைத்தியநாதனின் சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

'அந்தாதி நாயகி' என்ற பொருளில் இத்தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 02.08.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் மஹா உற்சவம் நடைபெறவுள்ளது.

# நடிகர் ரவிச்சந்திரன் காலமானார்



(கொழும்பு)

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவராக இருந்த ரவிச்சந்திரன் நேற்று மாலை சென்னையில் காலமானார். அவருக்கு வயது 71.

காலஞ்சென்ற இயக்குநர் ஸ்ரீதர் அவர்களால் காதலிக்க நேரமில்லை திரைப்படத்தில் கதாநாயகனாக அறிமுகமானார் ரவிச்சந்திரன். பின்னர் தொடர்ச்சியாக பல படங்களில் அவர் கதாநாயகனாக நடித்து வெற்றி பெற்றார்.

அவர் நடித்த வெற்றிப் படங்களில், அதே கண்கள், நான், மூன்றெழுத்து, குமரிப்பெண் உள்ளிட்ட பல படங்கள் குறிப்பிடத்தக்கவை.

# இந்தியா சென்ற படை அதிகாரிகள் எவரும் திருப்பி அனுப்பப்படவில்லை

(கொழும்பு)

பயிற்சிக்காக இந்தியா சென்ற இலங்கைப் படையினர் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என இராணுவப் பேச்சாளர் உபய மெதவல தெரிவித்துள்ளார். இலங்கையைச் சேர்ந்த 23 படையதிகாரிகள் இவ்வாறு இந்தியாவில் பயிற்சி பெறச் சென்றனர்.

தமிழக அரசியல் கட்சிகளின் அழுத்தம் காரணமாக இலங்கைப் படையதிகாரிகள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்த போதிலும், உண்மையில் அவ்வாறு திருப்பி அனுப்பப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு மட்டுமல்ல பாகிஸ்தான், இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கும் இலங்கை படையதிகாரிகள் கல்விச் சுற்றுலாக்களை மேற்கொண்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# அமெரிக்க யுவதியின் முகத்தில் துப்பிய இளைஞர் யார்?

## அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

கொள்ளுபிட்டியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் வைத்து இலங்கை இளைஞர் ஒருவர் தனது முகத்தில் துப்பியதுடன் தன்னை அவமதித்ததாக அமெரிக்க யுவதியொருவர் கொள்ளுப்பிட்டி பொலிஸில் புகார் செய்துள்ளார்.

மாணவியான தான், சுற்றுலா பயணியாக இலங்கைக்கு வந்ததாகவும் மேற்படி இளைஞர் சுமார் 25 வயதானவராக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்பு கமெரா மூலம் சந்தேகநபரை தாம் இனங்கண்டுள்ளதாக கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரட்னவிடம் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக விசாரணை நடத்தி, ஜூலை 28 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# நோர்வே தாக்குதலில் தப்பிப் பிழைத்த தமிழ்ப் பெண்

## அனுபவம் பகிர்கிறார்



(கொழும்பு)

நோர்வேயில் இடம்பெற்ற கோடைகால முகாம் மீது துப்பாக்கிதாரி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது இலங்கையைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட கம்சாயினி குணரட்ணம் என்ற இந்தப் பெண் 2004-2007 வரையான காலப்பகுதியில் ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைப் பெற்றுக் கொண்டதுடன், இவர் 2007 இல் இருந்து தொழிலாளர் கட்சி இளைஞர் அணியின் ஒஸ்லோ பொதுச் சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவ்வகையில், வெள்ளியன்று இடம்பெற்ற தொழிற்கட்சியின் இளையோர் அணிக்கான கோடைகால மாநாட்டில் இவரும் கலந்து கொண்டிருந்தார். இவரும் பிறிதொரு அரசியல்வாதியும் துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதலிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் சம்பவம் இடம்பெற்ற தீவிலிருந்து படகொன்றின் மூலம் தாம் பாதுகாப்பான இடத்திற்கு வந்து சேர்ந்ததாகவும் கம்சாயினி குணரட்ணம் தனது Facebook தகவலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் துன்பகரமான சம்பவத்திலிருந்து தப்பிப் பிழைத்து நகருக்குள் வந்த முதலாவது குழுவினருள் கம்சாயினியும் அவரது நண்பர்களும் இருந்தார்கள்.

நோர்வே தொழிற்கட்சியின் இளையோர் அணிக்கான கோடைக் கால முகாமில் கம்சாயினி குணரட்ணத்துடன் வேறு மூன்று ஈழத் தமிழ் இளைஞர்களும் கலந்து கொண்டனர் என்பதும் அவர்களும் உயிர் தப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தெற்காசிய அபிவிருத்திக்கு அவுஸ்திரேலியாவில் குடியுரிமை

(சிட்னி)

எதிர்வரும் வருடங்களில் அவுஸ்திரேலியாவில் உத்தியோகபூர்வமாக பதிவுசெய்யப்பட்ட அகதிகள் 4 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்குவதென அவுஸ்திரேலியா, மலேசியா ஆகிய நாடுகளுக்கிடையில் இன்று திங்கட்கிழமை ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியுள்ளது.

எதிர்வரும் வருடங்களில் அவுஸ்திரேலியாவில் உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்ட அகதிகள் 4 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்குவதெனவும் மேலதிகமாக தங்கியுள்ள மலேசியாவைச் சேர்நத 800 பேரையும் மலேசியாவுக்கு திருப்பி அனுப்புவதெனவும் ஒப்பந்தத்தினூடாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் குடியுரிமை பெறுவோர் அனைவரும் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தோர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வியாபாரிகளை மிரட்டி கப்பம் கொழும்பில் பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

கொழும்பின் முன்னணி மொத்த வியாபாரிகளிடம் பணம் பறித்து வந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வர்த்தகர்களை அச்சுறுத்தி அவர்களிடம் பணம் பறித்த கும்பலின் பிரதான சந்தேக நபராக இந்தப் பொலிஸ் பரிசோதகர் திகழ்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் தலைமையகத்திலும் குறித்த சந்தேக நபர் கடமையாற் றியுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த அதிகாரி மோட்டார் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றி வந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

புறக்கோட்டையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் 70 இலட்ச ரூபா கப்பம் பெற்றுக்கொண்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளின் போது கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மற்றுமொரு வர்த்தகரிடம் 35 இலட்ச ரூபா கப்பமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தக் கொள்ளைக் கூட்டத்தில் மேலும் மூன்று காவல்துறை உத்தியோகத்தர்களும், இரண்டு இராணுவ உத்தியோகத்தர்களும் அங்கம் வகித்ததாகவும், இவர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.